880



இந்தியாவிலே கர்த்தூஸியத் துறவிகள்

சங். கஸ்பார் பின்டோ சுவாமியவர்களால் எழுதப்பட்டது

18 FEB 1941
MADRAS

880

346

"கர்த்தூஸியருடைய (ஆடவர்) மௌனசபை இந்தியாவில் ஸ்தாபிக்கப்படுமாவென்ற சிந்தனையானது தற்போது சித்தியாகுமென்ற நம்பிக்கை நம்மிடம் உதயமாகின்றது. அம் மௌன சபையின் சார்பாக நீங்கள் எடுத்துக்கொள்ளும் சிரமங்களை மிக்கப் பாராட்டுகிறோம். தவிர, உதய தாரகைக்கொப்பாயிருக்கும் இப்புத்தகமானது, கர்த்தூஸிய சபையில் சேர ஆசிப்பவர்களுக்கு ஒரு வழிகாட்டியாயிருக்குமென்று நம்புகிறோம்."

+ Leo P. Kierkels C.P.

✠ லியோ பி. கியேர்கெல்ஸ், சி. பி.,
இந்தியாவின் அப்போஸ்தலிக் ஸ்தானாதிபதி.

MISSION LITERATURE STORES

விலை அணா 4. 100 பிரதிகளுக்கு ரூ. 20.

Imprimatur :

✠ J. MENDONÇA, Bishop of Trichinopoly.

பொருளடக்கம்

		பக்கம்
I.	காத்தூஸிய சபையைப்பற்றி	
	• அர்ச். பாப்பானவரின் சொற்பொழிவு	1
	ரேரும் எக்லேசியே	7
	அப்போஸ்தொலிக் ஸ்தாநாதிபதியின் கடிதம்	9
	இந்தியாவின் பேற்றிரியார்க்	9
	திருச்சி மேற்றிராணியார்	9
II.	கர்த்தூஸியரின் தினசரி வாழ்க்கை	10
	ஏகாந்த ஜீவியம்	10
	பொது ஜீவியம்	15
	தேவகீதம்	16
III.	கர்த்தூஸிய சபையில் சேர்தல்	20
	(1) பாடும் துறவிகள்	20
	இந்திய அபேக்ஷகர்களுக்கு ஆலோசனைகள்	21
	ஒரு அபேக்ஷகரின் முழு விபரச்சீட்டு	22
	மடத்தில் பிரவேசம்	23
	(2) துணைச்சகோதரர்கள்	26
	பரித்தியாகிகள்	27
	(3) கர்த்தூஸிய கன்னியர்கள்	28
IV.	சபையின் ஆட்சி வகை	31
V.	கர்த்தூஸிய சபையின் சரித்திரத்தைச் சிறிது ஆராய்தல்	34
	அர்ச். புருனோ	34
	அர்ச். புருனோவின் மரணத்திலிருந்து 19-ம் நூற்றாண்டுவரை	43
	இந்திய கர்த்தூஸியர்	47

இந்தியாவிலே கர்த்தூஸிய துறவிகள்

சங். கஸ்ப்பார் பிண்டோ சுவாமியவர்களால்
எழுதப்பட்டது

271.71
346

I

கர்த்தூஸிய சபையைப்பற்றி அர்ச். பாப்பானவரின் சொற்பொழிவு

தேவகிருபையால் பாப்பானவரான நமது பரிசுத்த தந்தை 11-ம் பத்திநாதர் அங்கிகரித்து அருளிய உம்பிராத்திலேம் (*Umbratilem*) என்ற அப்போஸ்தொலிக் நிருபம் :—

உலக ஆசாபாசங்களை அகற்றி தங்களது ஒழுங்குப்பிரகாரம் ஏகாந்த ஜீவியத்தில் ஜீவித்து, மிக்கச் சுறுசுறுப்போடு தேவ இரகசியங்களையும், நித்திய சத்தியங்களையும் தியானித்து, கடவுளின் இராச்சியம் எங்கும் பரவி அபிவிர்த்தியடைய இடைவிடாமல் தங்களுடைய உருக்கமுள்ள ஜெபங்களை சர்வேசுரனுக்குச் சமர்ப்பிக்கிறவர்களும், தங்களுடைய சொந்தக் குற்றங்குறைகளுக்குப் பரிகாரமாக சுயேச்சையான அல்லது தங்களின் ஒழுங்குகளுக்கொத்த ஆத்தும சரீர தப முயற்சிகள் செய்வதுமன்றி, இதைவிட அதிகமாய் மனுக்குலத்தின் பாவங்களுக்குப் பரிகாரமாக தபம் செய்கிறவர்களும்,—மெய்யாகவே இவர்கள் பெத்தானியா மரியாளைப்போல, மேலான அந்தஸ்தைத் தெரிந்துகொண்டார்கள் என்று அவர்கள் பெருமை விளங்கச் சொல்ல வேண்டும். தெய்வ சித்தப்படி மானிடர்களுக்கு இதைவிட ஏற்றதும் இசைந்ததுமான அந்தஸ்து, வேறு எதுவுமில்லை. ஏகாந்தத்தில் தெய்வத்தோடு ஒன்றித்திருக்கும் இவர்களின் ஜீவியம், நம் கிறீஸ்துநாதரின் அர்ச்சியசிஷ்டதனத்தை அடுத்துள்ளதே. அதினால்த்தான் திருச்சபை இவர்களின் பரிசுத்த ஏகாந்த ஜீவியத்தை மனுக்குலத்தின் ஆச்சரியத்திற்கும் மாதிரிகைக்கும் ஓர் மேல்வரிச்சட்டமாகக் கொடுத்தது.

திருச்சபையின் சரித்திர ஆசிரியர் இந்தத் துறவிகளின் ஜெபத்தின் வல்லமையை பழைய ஏற்பாட்டில் நடந்த ஒரு சம்பவத்தைக்கொண்டு நன்கு விளக்குகிறார்கள். ஜோஸுவே அமலேக்

கியர்களுடன் சண்டை செய்கிறார். ஜோஸுவேயின் ஜெயம் மோயீசனின் ஜெபத்தைச் சார்ந்திருந்தது. மோயீசன் வானத்தை நோக்கி தனது கரங்களை உயர்த்தியவண்ணம் ஜெபிக்குமளவும் இஸ்ராயேலரின் படை ஜெயம் பெற்றது. ஆனால் களைப்பினால் மோயீசனின் கைகள் தாழ்ந்த சமயமெல்லாம் அமலேக்கியர்கள் பக்கம் ஜெயம் காணப்பட்டது. ஆகையால், ஆரோனும், ஹூர் என்பவரும் ஜோஸுவே, போர்க்களத்தைவிட்டு வெற்றியுடன் திரும்பும் வரையில், மோயீசனின் கரங்களைத் தாங்கிக்கொண்டிருந்தார்கள்.

இந்தத் **துறவிகள்** திருப்பீடத்தில் ஒப்புக்கொடுக்கும் பூசைப்பலியையும், அவர்களது ஒறுத்தல் முயற்சிகளையும், மோயீசன் இரு கரங்களையும் உயர்த்தி வேண்டினதற்கு ஒப்பிடலாம். இவ்விதமான உன்னத ஜீவியத்தால், ஆதியிலிருந்து திருச்சபை அடைந்த பெரும் நன்மைகளை யாரும் விவரிக்க முடியாது. மேலும் வெகுகாலமாய் யாதொரு சீரழிவின்றி நாளுக்குநாள் எங்கும் பரவிவருகிறது. "இவ்வித ஏகாந்த துறவிகள் திருச்சபைக்கு மகிமை வருவிக்க காரணமான பகுதியினர்" என்று அர்ச். சிப்ரியன் எழுதியுள்ளார்.

எஜிப்து தேசத்தில், டேசியஸ் சக்கரவர்த்தியின் ஆதிக்கத்தில் வேதத்திற்காகத் துன்புறுத்தப்பட்ட விசுவாசிகள் நாட்டை விட்டு காட்டை அடைந்தார்கள். தங்கள் அனுபோகத்தால் அங்கு நடத்திய ஏகாந்த ஜீவியத்தின் ஆத்தும பிரயோஜனத்தை அறிந்தார்கள். ஆகையால் எஜிப்து தேசத்தில் துன்பம் துலைந்து இன்பம் நிலவிய சமயத்திலும், வீடு திரும்ப மனதின்றி காட்டிலேயே, அநேகர் ஏகாந்த ஜீவியத்தை நடத்தினார்கள். பட்டணங்களில் உள்ள ஜனத்தொகைபோல், வனாந்திரம் நிறைய ஏகாந்த துறவிகளிருந்தார்கள். அவர்களில் பலர் தனியே ஜீவித்தபோதிலும், சிலர் மடாதிபதியான வனத்து அந்தோனியாரின் அதிகாரத்தின்கீழ் கூட்டமாய் வசித்தனர். இதுவே கூட்டமான வனஜீவியத்தின் ஆரம்பம். நாளாவட்டத்தில் பல சட்டதிட்டங்களுடன் இவ்வித மடங்கள் கீழ்தேசமெங்கும் பரவியது. பிறகு இத்தாலியா, பிரான்சு, ஆப்ரிக்கா முதலிய தேசங்களிலும் பரவிற்று. இதே சமயத்தில் துறவற ஆஷ்ரமங்களும் தோன்றின.

ஒவ்வொரு சகோதரரும் தன் தன் அறையில் தனிவாசம் செய்து, எவ்வித வெளி வேலைகளிலும் யாதொரு கவலையின்றி, மறு உலகக் கவலையிலேயே தனது சிந்தனையைச் செலுத்த வேண்டுமென்ற ஒரே உன்னத நோக்கத்தைக் கொண்டுள்ளது

இச்சபை. ஆதலின் இச்சபையினல் கிறீஸ்துவ சமூகத்திற்கே ஏற்பட்டுள்ள நன்மையை அளவிடமுடியாது. செயற்கரியதும் உன்னதமுமான கிறீஸ்துநாதரின் பிறர்சிநேகக் கிரிகைகளை உத்தேசித்து நசரேத்தூரில், அவர் நடத்திய ஆடம்பரமற்றதும், மறைந்ததுமான வாழ்க்கையைப் பின்பற்றி, அவருடைய பாடுகளில் இன்னும் எஞ்சியதைப் பூர்த்திசெய்ய, இச்சபையினர்கள் தம்மைத்தாமே சர்வேஸ்பரனுக்கு ஒப்புக்கொடுக்கிருர்கள். இவர்களது நன்மாதிரிகையை அக்காலத்தில், இல்லறத்தாரும் துறவறத்தாரும், தங்களின் சொந்த நன்மையைக் கோரியாவது, ஆராய்ந்துபார்க்காது இருக்கமுடியவில்லை.

ஆனல் நாள் ஆக ஆக, இச்சிறந்த சபையும் கொஞ்சம் க்ஷீணித்து, தன் உழைப்பின் உற்சாகத்திலும் பின்னடையத் துவக்கியது. காரணம் யாதெனில், துறவிகள் அவ்வளவாக மற்ற ஜனங்களின் ஆத்தும காரியங்களில் கலந்துகொள்ளாவிடினும், ஜனங்களின் தெய்வீக காரியங்களின் மேலுள்ள உணர்ச்சிகளில் ஒன்றுபடக் கலந்ததுமல்லாமல், படிப்படியாக உலக விஷயங்களிலும் ஈடுபட்டனர். மேற்றிராணியார்கட்குச் சகல உதவிபுரியவேண்டுமென்றும், ஜனங்களின் உதவியை அதிகம் அடையமுடியாத குருப்பிரசாதிகட்கு உற்றவேளையில் உதவ வேண்டுமென்றும் எண்ணிஞர்கள். "சார்ல்மன்" என்பவரின் நோக்கத்தை ஒப்ப, ஜனங்கட்கு தாங்கள் ஞானோபதேசம் கற்பிக்கும் தகுதியுடையவர்கள் என்று நினைத்தார்கள். மேலும் அக்காலத்தில் எங்கும் நிறைந்திருந்த இன்னல்களால், துறவற சபைகள், தங்களது சட்டதிட்டங்களை பொறுப்புடன் ஏற்றுக்கொள்ளும் தகுதியை இழந்தன.

இதுகாரணமாக, எத்தனையோ நூற்ருண்டுகளாக சீர்திருத்தம் செய்யப்படாத, இச்சபைக்கும் சீர்திருத்தம் அவசரமென்பதை திருச்சபை உணர்ந்தது. ஏனெனில் உலக வீண்கவலைகளால், அலைக்கழிக்கப்படாமல் சதா தேவ இரக்கத்தை மன்ருடுவோரின் ஜெபதப கிரிகைகள் குறைதல் கூடாதென்றும், ஆத்தும இரட்சண்யத்திற்கு இன்றியமையாத சாதனமாகிய வரப்பிரசாதங்களை மோட்சத்திலிருந்து அடைந்துகொள்ளவேண்டுமென்பதும் திருச்சபையின் ஏகசிந்தனை.

தெய்வ பராமரிப்பு மிகவும் ஆச்சரியமுள்ளது. காலத்திற்கேற்ற மேலான ஞானத்தைக் கொண்டிருந்த "புருனே" (Bruno) என்பவரால் இச்சபை பழைய உன்னதநிலையை அடையவேண்டுமென்பது தெய்வசித்தம். தெய்வசித்தத்தை உணர்ந்த புருனேவும், கர்த்தூஸிய சபையை ஏற்படுத்தினர். அது முற்றி

லும் அவருடைய சொந்த நோக்கங்களையே கொண்டுளது. ஆத்தும பரிசுத்த தனத்திற்கும், வெளிநாட்டங்களை அடக்கும் கடின தபசு முயற்சிக்கும், ஏற்றதும் இசைந்ததுமான ஒழுங்குகளை ஏற்படுத்தினர். மேற்கண்ட ஒழுங்குகளை, கர்த்தூஸிய துறவிகள் தங்களது தந்தை புருனோவின் எண்ணத்திற்கேற்ப எவ்வளவு பிரமாணிக்கமாய் அனுசரித்து வந்திருக்கிறார்களென்றால், இச்சபையின் சீவியகாலமாகிய இந்த தொளாயிரம் வருஷங்களாக, மற்ற எல்லா சந்நியாச சபைகளுக்கும் தத்தம் ஒழுங்குகளைச் சீர்திருத்தம்செய்ய அவசரமாயிருந்ததைப்போல் இக்கர்த்தூஸிய சபைக்கும் தனது சபை ஒழுங்குகளை சீர்திருத்தம் செய்ய ஒருக்காலும் அவசியம் ஏற்படவில்லை.

இந்த உத்தம மனிதர்களைப் பார்த்து அதிசயிக்காதவரெவரும் உண்டோ? தங்களின் சகோதரர்களின் ஆத்தும ஈடேற்றத்தையே சிரமேற்கொண்டு, உலக சம்பந்தத்தை முற்றிலும் தள்ளுகிறார்கள். மறைந்த ஜீவியத்தில் நுழைகிறார்கள். நிசப்தமான இவ்வித அப்போஸ்தலிக்கு ஊழியத்தில் தம்மைத் தானே கையளிப்பது எளிதான காரியமா? ஒவ்வொரு துறவியும் எக்காரணத்தைமுன்னிட்டாவது சீவிய காலமெல்லாம் மடத்தை விட்டு வெளியேறுவதில்லை. ஒவ்வொருநாளும் அல்லும்பகலும் அயராமல், குறித்த நேரங்களில் நற்கருணைநாதருக்குமுன் கூடுவார்கள். கிரகோரியன் (*Gregorian*) சங்கீதங்களை குறிப்பிலுள்ள பிரகாரம் யாதொரு இசைமீட்டும், பக்கவாத்தியமுமின்றி பாடுவார்கள். மற்ற எந்த சபையாரும் இப்படிப் பாடுவதில்லை. இவ்விதமாகத் தங்கள் இனிய குரலை உயர்த்தி ஆண்டவர்பேரில் அரிய கீதங்களைப் பாடி, திருச்சபையின் அபிவிருத்திக்காகவும், பாவிகள் மனந்திரும்புவதற்காகவும் ஒப்புக்கொடுக்கிறார்கள். இவர்களின் பக்தி நிறைந்த மன்றாட்டிற்கு நம் சிநேக தேவன் செவிசாய்க்காதிருப்பாரா?

2-ம் உர்பன் (*Urban*) என்னும் பாப்பானவர், தமது ஆசிரியராயிருந்த புருனோவைத் தனக்கு ஆலோசனைக்காரராக நியமித்து அவருக்கு அன்பும் ஆதரவுமளித்தார். அக்காலந்துவக்கி நாளது வரை, கர்த்தூஸிய சபை, பாப்பரசர்களின் விசேஷ கண்காணிப்பிற்கு உரிமையுள்ளதாயிருந்துவருகிறது. இதற்குக் காரணம் இச்சபையின் அர்ச்சியசிஷ்டதனம் நிறைந்த உன்னத ஜீவியமே. கர்த்தூஸிய சபைமீது நமக்குள்ள அபிமானத்திற்கு எல்லையே இல்லை. உபயோகம் நிறைந்த இந்த உன்னத சபை எங்கும் பரவி பலுகவேண்டுமென்பதே நமது முழுமன ஆசை.

தற்காலத்தில் அநேகர் பெயருக்குமட்டும் கிறீஸ்துவர்களாக இருக்கிறார்கள். நித்திய ஜீவியத்தைப்பற்றி நினைப்பதே இல்லை. ஒரு நிமிஷத்தில்த் தோன்றி மறையும் உலக சந்தோஷத்திலேயே ஈடுபட்டிருக்கிறார்கள். தங்களது பகிரங்க ஜீவியத்திலும், அந்தரங்க ஜீவியத்திலும், அஞ்ஞானிகளைப்போல், பல அர்த்தமற்ற அனுசாரங்களைக் கையாடுகிறார்கள். காலநிலை கலங்கி நிற்கும் இவ்வித விபரீத காலத்தில், கர்த்தூஸிய சபை திருச்சபையில் பரவவேண்டுமென்பது அவசியமாகும்.

பழமையான ஆசாரங்களுக்குப் பதிலாக, விசாலமானதும், மிகச் சுலபமானதுமான புண்ணிய வழிபாடுகளை துறவற மடங்களில் புதுப்பிக்கவேண்டுமென்று ஒரு சிலர் தப்பிதமாக எண்ணுகிறார்கள். 1899-ம் ௵ ஜனவரி-௴ 22-ம் ௳ விடுத்த "தெஸ்த்தெம் பெனெவொலென்சியெ" (*Testem Benevolentiae*) என்னும் நிருபத்தில் அழியாப் புகழுடைய பதிமூன்றாம் சிங்கராயர் மேல்சொன்ன தப்பிதமான எண்ணத்தை சரியாய்க் கண்டித்து, இவ்வித தப்பறையான எண்ணம், கிறீஸ்துவ பரிசுத்த தனத்திற்கு எவ்வளவோ தீமையானது என்று தீட்டியுள்ளார்.

இந்தத் துறவிகள் தங்கள் ஜெபதபங்களை, பொறுப்புடன் செய்வதால், திருச்சபையின் அபிவிர்த்திக்கும், சமூக நன்மைக்கும், அதிகம் உதவுகிறார்கள். இவர்கள் உதவி, எஜமானனின் தோட்டத்தில் வேலை செய்கிறவர்களின் உதவியைவிட மேலானது. ஏனெனில் இந்தத் துறவிகள் பரலோக ராச்சியத்தினின்று, வரப்பிரசாத மழையை இறங்கச்செய்யாவிடில், ஆத்தும நிலம் அதிகப் பலனையளிக்காது. கர்த்தூஸிய துறவிகள் நமது மனதில் மங்காத நம்பிக்கையையும், ஆறுதலையும், விளைவிக்கிறார்கள். சுயமனதாய் கஷ்டமான ஒழுங்குகளை நுணுநுணுக்கமாய் அனுசரித்து, தங்களது அர்ச்சியசிஷ்டதனத்தால் இரக்கம் நிறைந்த பிதாவின் அன்பையும் ஆதரவையும் சம்பாதித்துக்கொள்ளுகிறார்கள். கிறீஸ்து ராஜ்யத்திற்காக, பிதாவிடம், வல்லமையுடன் மனுப்பேசத் தகுதியுடையவர்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை.

கர்த்தூஸிய சபை ஒழுங்குகளை 11-ம் இன்னோசென்ட் என்னும் பாப்பானவர் மிகவும் பாராட்டியுள்ளார். இது 1688-ம் ௵, மார்ச்சு-௴, 27-ம் தேதி, அவர் விடுத்த "**இன்ஜூங்த்தும் நோபிஸ்**" (*Injunctum Nobis*) என்ற நிருபத்தில் காணக் கிடக்கிறது. அர்ச்சியசிஷ்டதனத்தில் கீர்த்திவாய்ந்த அந்தப் பாப்பானவர், கர்த்தூஸிய சபையை வெகுவாய்ப் புகழ்ந்

திருப்பது குறிப்பிடத்தக்கது. இந்தச் சபை "கிறிஸ்துநாதரின் வலது கையால் **யுத்த வயலாகிய திருச்சபையின்** மத்தியில் நடப்பட்டது. இது சுவையுள்ள பழங்களை ஏராளமாய் எப்பொழுதும் கொடுக்கும் நல்ல மரம்" என்று எல்லா பாப்புமார்களும் இச்சபையைப்பற்றி பெருமையுடன் புகழ்ந்ததாகச் சொல்லுகிறூர். மேலும் இச்சபை "சிநேகத்தின் ஊற்று என்றும், இதன் அங்கத்தினர்கள் சதா தெய்வீக சிந்தனையால், எல்லாம் வல்லவருக்கு ஊழியம் செய்கிறூர்கள் என்றும்" இவர் எழுதி வைத்துள்ளார்.

இச்சபையின் ஒழுங்குகளை, திருச்சபை சட்டத்திற்கு இணங்கும்படி செய்வது அவசியமாயிற்று. ஆதலின் கூட்டத்திற்கு வர உரிமையுள்ள அங்கத்தினர் யாவரும் ஒன்றுகூடினர். அக்கூட்டத்தில் சபையின் ஒழுங்கிற்குச் சம்மந்தப்படாத பல பழக்கவழக்கங்களைத் தள்ளி, உபயோகமுள்ள சில உரிமைகளைச் சேர்த்துக்கொண்டார்கள். இவ்விதமாக சீர்திருத்தி லத்தீன் பாஷையில் எழுதப்பட்ட ஒழுங்குகளை முறைப்படி, இவைகளை மேல்பார்க்கும் திருச்சபை அதிகாரிகளிடம் நாமே ஒப்படைத்தோம். அதன் சாராம்சம் பின்வருமாறு:

கர்த்தூஸிய சபை ஒழுங்குகள்

திருச்சபை சட்டத்திற்குத் தகுந்தாற்போல், தற்காலத்திற்குப் பொருந்தாத, மிகப்பூர்வமான பழக்கவழக்கங்களை நீக்கி, சில பொதுக்கூட்ட (*General Chapter*) அநுஷ்டானங்களை சேர்த்திருக்கிறது.

மேற்சொன்ன ஒழுங்குகட்கு முகவுரை

தேவ ஆராதனை—அங்கத்தினர்களின் பொதுநலம்—அவர்களின் சமாதானம்—ஒழுங்குகளை பிரமாணிக்கமாய் அனுசரிப்பதில் முன்னேற்றம்—முதலியன.

கர்த்தூஸிய ஒழுங்குகளை திருச்சபை சட்டத்திற்கேற்ப சீர்திருத்தி அமைத்த பொது சங்கமானது, பாப்பானவரின் அதிகாரத்தால், புதிதாய் எழுதப்பட்டுள்ள ஒழுங்குகளை ஆமோதிக்கும்படி விண்ணப்பம் செய்தது. நாம் அதன் வேண்டுகோளிற்கிணங்கி, சீர்திருத்தி அமைத்த ஒழுங்குகளை முழுமனச் சம்மதத்தோடு ஆமோதிக்கிறோம். பாப்பானவரின் திடமான அனுமதி பெற்ற இந்த ஒழுங்குகளுக்கு யாதொரு பங்கமும் ஏற்படக்கூடாதென்பது அறியத்தக்கது. ஒழுங்குகளில் குற்றங்குறைகளிருந்தால், அவைகளை நிவர்த்திபண்ணுகிறோம்.

நாளதுவரை கர்த்தூஸியர்கள் தங்கள் சபை ஒழுங்குகளைப் பிரமாணிக்கமாக அனுசரித்து வந்தார்கள் என்பதை நாம் அறிவோம். ஒழுங்குகளை அனுசரிக்கும் விஷயத்தில் நாம் அவர்களுக்கு ஒன்றும் சொல்லத் தேவையில்லை. அவர்களுக்கு உற்சாக மூட்டவும், அவர்களின்மேல் நமக்குள்ள பேரன்பைத் தெரிவித்துக்கொள்ளவும், தங்கள் கோவிலைச் சந்தித்து தாங்கள் வழக்கம்போல் செய்யும் அனுதின காரியங்களை நிறைவேற்றும் ஒவ்வொரு கர்த்தூஸியருக்கும், புது அங்கிகாரத்தின்படி கர்த்தூஸியர் வருடாந்திர தினமாகிய ஜுலை-மீ 8-உ அன்று, பரிபூரண பலனைப் பெற்றுக்கொள்ளும் விசேஷ அனுமதியை இதே நிருபமூலமாகத் தெரிவிக்கிறோம்.

இவ்வித நிருபங்கள், சீர்திருத்தி எழுதப்பட்ட ஒழுங்குகள், தங்கள் அதிகாரத்திலும், வல்லமையிலும், பலனிலும் கொஞ்சமும் மங்காமல், எப்போதும் நீடித்திருக்குமென்று திட்டம் செய்கிறோம். இவ்வொழுங்குகளை தழுவுகிறவர்கள் இவைகளிலடங்கிய சகல உரிமைகளுக்கும் பாத்திரவான்களாகிறார்கள். எல்லா விதமான தீர்ப்புகளும், திட்டங்களும் இவைகளைத் தழுவினதாகவே இருக்கவேண்டும். இவைகளுக்கு விரோதமாய் எவராலும் யாதொரு விதமான சட்டதிட்டமும் பிறப்பிக்க முடியாது. அப்படி யாரும், அதிகாரத்தோரணையில் தெரிந்தோ, தெரியாமலோ, சட்டம் பிறப்பித்தால் அது செல்லாது. திருச்சபை அதிகாரிகளின் அனுமதிப்படி, இவைகளிலிருந்து எடுக்கப்படும் பிரதிகளுக்கும் மேற்கண்ட சகல உரிமைகளும் உண்டு. ஆகையால் அவைகளைக் காண்கிறவர்கள், அவைகளுக்குரிய அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

நமது ஆளுகையின் மூன்றாவது வருடமாகிய 1924-ம் ஹூ ஜுலை மாதம், 8-ம் தேதி, ரோமை அர்ச். இராயப்பர் தேவாலயத்தில் நமது முத்திரையோடு இந்நிருபம் கொடுக்கப்பட்டது.

P. CARD. GASPARRI, *Secretary of State.*

C. CARD. LAWRENTI, *Prefect of the S. Cong. of Religious.*

Dominic Jorio, *Protonotary Apostolic*

Vincent Bianchi-Cagliesi, *Protonotary Apostolic*

L. ✠ *S.*

"ரேநம் எக்லேசியே" (*RERUM ECCLESIAE*) என்ற நிருபத்தில் அர்ச். பாப்பானவர் இன்னும் இச்சபையைப் பற்றி பின்வருமாறு உரைக்கிறார்: "இது சமயம் வரைக்கும் இச்

சபையில் உட்பட்ட அல்லது உட்படப்போகிற உங்களுடைய துணைச் சகோதரர் அல்லது உதவிபுரிவோரைப்பற்றியே பேசினோம். இத்தலைப்பில் வேறொரு விஷயத்தையும் கருத்துடன் ஆராய்ந்து பார்க்கும்படி விரும்புகிறோம். அவ்விஷயம் கைகூடுமானால், விசுவாசம் தீவிரமாய் அபிவிருத்தியடைய அடிப்படையாயிருக்கும்.

"இப்பொழுது அப்போஸ்தோலிக் ஸ்தாபகம் போதுமான சாக்ஷியாயிருக்க, தியானயோக ஜீவியம், எவ்வளவு நன்மையைப் பயக்குமென்று அறிந்து, ஈராண்டுக்குமுன், திருச்சபைச் சட்டத்தை அனுசரித்து, அதை சீர்திருத்தி, போன்திப்பிக்கல் அதிகாரத்தினால் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட கர்த்தூஸிய சபையின் விசேஷ ஒழுங்குகளை நமது அப்போஸ்தோலிக் அங்கிகாரத்திற்கு உட்படுத்தினோம்.

"அன்றியும் மடங்களை ஸ்தாபிக்கிறதினால் கடின தியான ஜீவியம் புற்றுயிர்பெற்று பல மிஷன் நாடுகளில் உலாவி வருமாறு, இதைப்போன்ற மற்றச் சபையின் அதிசிரேஷ்டர்களை நாம் மனமுவந்து கேட்டுக்கொள்வதுபோல, கனம் பொருந்திய சகோதரர்களே, அன்புள்ள பிள்ளைகளே, நீங்கள் அத்தியான ஜீவியத்தில் பற்றுதல் வையுங்கள். ஏனென்றால் உங்கள் பிரயாசையால் அளவில்லாத வரப்பிரசாதங்களை ஏகாந்திகளாகிய நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள். அந்நிய பிரதேசங்களில் பெரும்பான்மையோர் அஞ்ஞானிகளாயிருந்தாலும், அவர்கள் சுபாவமாய் ஏகாந்தத்திற்கும், ஜெபத்திற்கும், தியானயோகத்திற்கும் இணங்கினவர்களாயிருக்கிறார்கள். அப்பிரதேசங்களில் உங்களுடைய துறவிகளின் நோக்கமும், துறவிகளைச் சூழ்ந்திருப்பவர்களின் நோக்கமும் ஒரே விதமாய் இணங்கியிருக்கிறதென்று கண்டு, மன அமைதிகொண்டு சந்தோஷப்படுவார்கள்.

"சபை ஸ்தாபித்தவருடைய ஒழுங்கையும், அவருடைய மனதையும் கடைப்பிடித்து வசிக்கும் துறவிகள் (*Anchorites*) இரக்ஷணிய வெளி அலுவலில் யாதொரு விதத்திலும் கலந்துகொள்ளாதபோதிலும், அநுதினமும் அவ்வித அப்போஸ்தோலிக்கு அலுவல் தேர்ச்சிபெற பெரும் உதவியாயிருப்பார்கள்.

"நீங்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து, ஒரேமனதாய் மடங்களை ஸ்தாபிக்கவேணுமென்று சிரேஷ்டர்களை மனுக்கொடுத்து கேட்கும்பொழுது, அவர்கள் மடங்களை ஸ்தாபித்தால், பெருந்தொகையான ஆத்துமங்களை இரக்ஷிப்பதற்கு அது ஒரு வழியாயிருக்கும். அன்றியும் அது நமக்கு மிகவும் திருப்தியாயும், அளவில்லா சந்தோஷமாயுமிருக்கும்."

இந்தியாவில் சத்தியவேதம் தழைத்து ஓங்க, கர்த்தூஸிய சபை ஒரு உன்னத சாதனமாகும். இக்கூற்றை வலியுறுத்த கீழ்இந்திய அப்பொஸ்தோலிக் ஸ்தானாதிபதியவர்களும், அவர்களுக்குக் கீழ்ப்பட்ட மேற்றிராணிமார்களும், சிரேஷ்டர்களும் நமக்கு அனுப்பியுள்ள திருமுகங்களே போன்றிய சான்றாகும்.

அப்போஸ்தோலிக் ஸ்தானாதிபதியின் கடிதம்:

எமக்கு அன்பாய் அனுப்பப்பட்ட "இந்தியாவில் கர்த்தூஸியர்" என்ற அருமையான ஆங்கிலப் புத்தகத்தை மிக்க அவாவோடு வாசித்து முடித்தோம். கர்த்தூஸியருடைய (ஆடவர்) மௌனசபை இந்தியாவில் ஸ்தாபிக்கப்படுமாவென்ற சிந்தனையானது தற்போது சித்தியாகுமென்ற நம்பிக்கை நம்மிடம் உதயமாகின்றது. அம்மௌன சபையின் சார்பாக நீங்கள் எடுத்துக்கொள்ளும் சிரமங்களை மிக்கப் பாராட்டுகிறோம். தவிர, உதயதாரகைக்கொப்பாயிருக்கும் இப்புத்தகமானது, கர்த்தூஸிய சபையில் சேர ஆசிப்பவர்களுக்கு ஒரு வழிகாட்டியாயிருக்குமென்று நம்புகிறோம்.

இந்தியாவின் பேட்டிரியார்க், மேன்மைதங்கிய தியோத்தோனியஸ் ஆண்டவரவர்கள், கோவா:

"இந்தியாவில் கர்த்தூஸிய சபை அபிவிர்த்திப்புக்காக இதுவரை நீங்கள் உழைத்ததின்பயனாக, அநேகர் அச்சபையைப் பற்றி அறிந்துள்ளார்கள் என்று கேள்வியுற்று நாம் சந்தோஷப்படுகிறதுமன்றி, எம்மால் கூடுமட்டும் இந்தியாவில் அச்சபையின் ஸ்தாபகத்துக்காக உமக்கு உதவிபுரிய வாக்களிக்கிறோம்."

திருச்சி மேற்றிராணியார்:

மத உணர்ச்சி நிறைந்த இந்தியாவில் இவ்வித சபை நிலைத்திருக்கும் என்று சொல்ல இடமுண்டு. இந்தியாவில் சந்நியாசிகள் மிகவும் பாராட்டப்படுகிறார்கள். ஆதலின் ஜெபம் தவம் நிறைந்த இத் தியாக ஜீவியத்திற்கு அநேக வாலிபர்கள் இப்புஸ்தகத்தால் தூண்டப்படுவார்கள். இவ்வித ஜீவியத்தால் மெய்மறை மென்மேலும் பரவுமென்பது நமது மாறாத நம்பிக்கை.

இதுபோலவே அநேக அதிமேற்றிராணியார்களும், மேற்றிராணிமார்களும், குருமட சிரேஷ்டர்களும், இன்னும் அநேக கனதனவான்களும் நமது தேசத்தில் கர்த்தூஸிய சபை இருந்து அபிவிர்த்தியடைய ஆசிக்கிறார்கள்.

II

கர்த்தூஸியரின் தினசரி வாழ்க்கை

கர்த்தூஸிய சபையில் சேர விரும்பும் நண்பர்களின் சௌகரியத்தை முன்னிட்டும், அவ்வாறு விருப்பமுடையவர்களை உற்சாகமூட்டித்தூண்டும் ஏனைய பெரியோர்களுக்கு ஓர் துணைக் கருவியாக இருக்கும்பொருட்டும், நாம் இங்கு சிறிது சுருக்கமாக சபையாரின் தினசரி வாழ்க்கையைப்பற்றிக் கூறுவது நலமென நினைக்கிறோம். கர்த்தூஸிய சபையின் ஜீவியம் விசேஷமாய் ஒரு ரிஷி (யோகி) யின் ஜீவியம். அச்சபையில் சேர்ந்தவர்கள் சதா யோக சிந்தனையிலாழ்ந்திருப்பவர்களல்ல. சர்வேசுரனைப் பற்றிய ஒரே சிந்தனையில் தம் வாழ்நாளைக்கழிக்க சகல வழிபாடுகளும் அதிலுண்டு. இச்சபையில் எல்லோரும் ஒன்றாகவே கூடி, ஒரு குடும்பமாக வாழ்கிறார்கள். ஆனால் அது பெரும் தபசு என்றே சொல்லலாம். இதைப்பற்றி கர்தினால் பை, என்பவர் கூறுவதாவது: "ஒரு கர்த்தூஸியரின் வாழ்வு தெய்வீக ஜீவியத்தைப்போன்றது. ஏனெனில் கடவுள் தன்னில்தானே ஏகமாயிருந்தாலும் மூன்றாட்களாக இருப்பதுபோல, ஒரு கர்த்தூஸியரின் வாழ்க்கை தனி ஏகாந்த ஜீவியமும் பொது ஜீவியமும் சேர்ந்த ஒரு வாழ்க்கை. ஆகையால் தனி அல்லது பொது ஜீவியத்தின் அசௌகரியங்கள் இதில் கிடையாது. தனி ஜீவியத்தையும் அமைதியையும் நிலைநாட்டுவதற்காக ஒரு சிறு குடிசை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இங்குதான் ஒரு கர்த்தூஸியர் வசிக்க வேண்டும். நாம் இப்பொழுது அந்தக் குடிசையைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

(1) ஏகாந்த ஜீவியம் (*Eremitical Life*)

கர்த்தூஸியரின் வாசஸ்தலமானது நான்கு அறைகளடங்கிய ஒரு சிறு குடிசை. இது மேல்மாடி கீழ்மாடி என்று இரு பிரிவாகக் கட்டப்பட்டிருக்கிறது. இதை ஒட்டி ஓர் அழகிய நந்தவனமும் உண்டு. துறவி ஆஷ்ரமத்திலிருந்து நாம் கீழ்மாடியில் நுழைவோமானால் நாம் அங்கு ஒரு சிறிய தாழ்வாரத்தைப் பார்க்கலாம். இங்குதான் துறவிகள் ஒழிந்த நேரங்களிலும் காலநிலை நன்றாகத் தோன்றாத வேளைகளிலும் இங்குமங்கும் நடந்து உலாவிக்கொண்டிருப்பார்கள். ஒரு வாசலின் வழியாக உள் நுழைந்தால், கீழ்மாடியில் இரு பிரிவாகப் பிரிக்கப்பட்ட ஒரு அறை தோன்றும். அதன் முன்வாசல் வளைவாகக் கட்டப்

பட்டிருக்கிறது. இதில் ஒரு பாகத்தில் பெரிய மரக்கட்டைகள் மொத்தமாகச் சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. மற்ருெரு அறையில் சிறுசிறு மரத்துண்டுகளும், ஒரு தச்சனுடைய மேஜையும், அங்கிருந்து வேலை செய்வதற்கென சில நாற்காலிகளும் இருக்கின்றன.

நாம் மேல்மாடிக்குச் செல்வோமானல் அவர்கள் வசிக்குமிடத்தைப் பார்க்கலாம். முதன் முதலாக ஒரு சிறு அறை இருக்கின்றது. படங்கள் வரைவதற்கும், சித்திரங்கள் வர்ணம் பூசுவதற்கும், வேறு சில வேலைகள் செய்வதற்கும் இந்த அறை உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது. அங்கு தேவமாதாவின் சுரூபம் ஒன்று உண்டு. துறவிகள் தாங்கள் இவ்வீட்டைவிட்டு வெளியே போகும்போது, இச்சுரூபத்தின்முன் முழந்தாட்படியிட்டு, ஒரு பிரியத்தத்த மந்திரம் சொல்லிவிட்டுப் போவது வழக்கம்.

மேற்கூறிய அறைகளைத் தவிர, உள்ளே இருக்கும் அறையே கர்த்தூஸியரின் தனி வாழ்க்கைக்கென்று ஏற்படுத்தப்பட்ட இடம் என்று சொல்லலாம். இந்த அறையில்தான் பரம கடவுளான கர்த்தரின் சன்னிதானத்தில் கர்த்தூஸிய துறவி தமது ஏகாந்த ஜீவியத்தைக் கழிக்கிருர். அவர் ஜெபம் செய்யுமிடமும் இந்தச் சிறு அறையே. தனக்காகவும் பிறருக்காகவும் அவர் செய்துவரும் தவ ஒறுத்தல் முயற்சிக்கு ஏற்ற இடம் இதுவென்று பார்த்தவர்களுக்கு உடனே புலப்படும். இன்னும் இதே இடம்தான் அவருடைய படுக்கையறையாகவும், சாப்பிடுமிடமாகவும், படிக்கும் இடமாகவும் உபயோகப்படுகிறது. மேலும் இந்த அறையின் ஒரு ஜன்னலின் எதிரே ஒரு மரத்தால் செய்யப்பட்ட சுவர் ஒன்று இருக்கின்றது. இது மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. ஒரு ஓரத்தில் குளிக்கும் இடத்திற்குச் செல்லும் ஒரு சிறு வாசலுண்டு. மத்தியில் அமைக்கப்பட்டிருக்கும் வாசல் படுக்கை அறைக்குப்போகும் வழி. இந்த வாசல் இரண்டு திரைகளால் மறைக்கப்பட்டிருக்கின்றது. மற்ருெரு ஓரத்திலுள்ள வாசல் வழியாய் சென்ருல் உள் அறையில் துறவிகள் தேவதுதி பாடுவதற்கென்று முழந்தாள்படியிட்டுக்கொள்வதற்குத் தகுந்த ஒரு மேஜை வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இங்குதான் அவர் தனியாக தேவஸ்துதிகளை வாசிக்கிருர். இச்சிறு அறையானது சேசுநாதர் பாடுபட்ட சுரூபத்தாலும், இன்னும் மற்றுமுள்ள சுரூபங்களாலும், பக்தியை எழுப்பத்தக்க நல்ல படங்களாலும் அலங்கரிக்கப்பட்

டிருக்கின்றது. ஜன்னலுக்குப் பக்கத்தில் ஒரு சாப்பாட்டு மேஜையுண்டு. இதுதான் அந்தத் துறவியார் தனியே இருந்து சாப்பிடும் இடம். அறையின் மற்ருெரு மூலையில் பல பக்திக் கடுத்த புஸ்தகங்கள் வைக்கும் அலமாரி இருக்கிறது. இந்த அலமாரியில்தான் துறவி ஆஷ்ரமத்திலுள்ள புத்தகாலயங்களி லிருந்து வாசிப்பதற்கென்று கொண்டுவரப்பட்ட வேத சாஸ்திர புஸ்தகங்களும் வைக்கப்படும்.

கீழ்ப்படிதலைமுன்னிட்டு அவர்கள் ஒரு தனி அறையில் ஏகாந்த ஜீவியம் ஜீவித்தலானது, சபையின் பொது அநுஷ்டா னங்களைக் கடைபிடித்து ஒழுக ஒரு சாதகமென்கலாம். அன்ரு ரின் கால ஒழுங்குகளைச் சுருங்கச் சொல்லின், அமரிக்கையாக அவரவர் தம் அறையில் வாசித்துக்கொண்டும், எழுதிக்கொண் டும், ஜெபித்துக்கொண்டும், தியானித்துக்கொண்டும், வேலைகளைக் கிரமமாகச் செய்துகொண்டும் இருப்பார்கள். எனவே நாட்கள் வெய்யவன் முன் கண்ட பனிபோல் மறையும்.

அவர்களின் பற்பல அலுவல்களை மூன்று பெரும் பாகங்க ளாக குறிப்பிடலாம். அவை பின்வருமாறு—**தனிஜெபம், படிப்பு, கைவேலை.** கர்த்தூஸிய சபையாரின் முக்கிய நோக்க மும், உயிர்நிலைமையும் ஜெபமேயாதலின், அதுவே அவர்கள் ஜீவியத்தின் மூலாதார அடிப்படையும், முதன்மையாகவும் கோரப்படுகிறது.

அவர்கள் எல்லோரும் ஒருமிக்கச் சேர்ந்து பாடும் தேவ கீதங்களைத்தவிர, இன்னும் பல ஞானமுயற்சிகளை தனிமையாகச் செய்துவருவார்கள். இதுவுமல்லாமல் தனித்தனி தன் அறையில் மாதாவுக்குத் தோத்திரமாக மந்திரமாலையை ஜெபிப்பார்கள். நடுச்சாமத்துக்குமுன்னே கண்விழித்த நேரங்களில் எழுந்து காலைஜெபமும் (*Matins and Lauds*) பூஜித தோத்திரமும் செய்வார்கள். கர்த்தூஸியரின் ஒவ்வொரு நாட்களும் மாதாவுக் குப் புகழ்மாலை சாற்றுவதிலேயே அடங்கி இருக்கிறது என்பது வெள்ளிடைமலை. நாட்களுக்குத் தக்காப்போல் காலை நேரங் களில் சிறுமணியாராதனையும், பிற்பகலில் மாலையாராதனையும் (*Vespers*), கடைசி வேண்டுதல் (*Compline*) சாயங்காலத்தி லும் நடைபெறும். கடைசி வேண்டுதலைத் தவிர, கர்த்தூஸிய ரின் ஒவ்வொரு கட்டளைச் செபத்துக்கு முன்னும் அர்ச். தேவ மாதாவின் மந்திரமாலை செபிக்கப்படும். ஆதலால் பாலைவனத் தில் வசிக்கும் கர்த்தூஸியர்களுக்கு இராக்கினியான மாதாமீது விசேஷித்த பக்தி இருக்கிறது என்பது தெளிவு.

தேவ தோத்திரத்திற்குப்பின் தியானம் செய்வதுண்டு. இதனால் கிடைக்கக்கூடிய பலனையடையவே ஒவ்வொரு துறவியும் தன் நேரத்தையும், கவலையையும் செலுத்துகிறார். துறவிகள் மடத்தின் சடங்குகளை நவசந்நியாசியான (*Novice*) காலத்தில் கிரமமாக விரிவாய் படித்தறிவதுடன், ஒழுங்குகளையும் அநுசரிக்க வேண்டும். ஆனால் சிரேஷ்டர் உத்தரவின்மேல் தியானத்தில் அதிகநேரம் செலவழிக்கலாம். குருக்களானவர்கள் ஏற்கனவே வேதசாஸ்திரம் கற்றிருப்பதால், நவசந்நியாச காலத்தில் அவர்கள் வேறு படிப்பிலோ ஜெபத்திலோ கவனத்தைச் செலுத்தலாம். சர்வேஸ்பரனுடன் ஒன்றித்திருப்பதே ஒவ்வொரு கர்த்தூஸியரின் முக்கிய நோக்கமாகும் "ஆண்டவரை ஆத்துமம் எந்நேரமும் ஸ்துதிக்கிறது," எபே. 6, 18. இது ஒன்றே அவர் சதா செய்யும் அவருடைய ஏக அலுவல். தேவன், தியானிக்கவும், தேடவும், இனிய கானத்தால் பாடவும் படுகிறார். டெனிஸ் என்ற ஒரு கர்த்தூஸியர் சொல்லுவதாவது: "உட் தியானமின்றி ஆண்டவரை வணங்கவோ, பாடவோ முடியாது."

கர்த்தூஸிய சபையில் படிப்பு ஓர் உயர்ந்த நிலையிலிருந்து வருகிறது. சாதாரண வார்த்தைப்பாடு கொடுக்க முயலும் துறவிகளுக்கு படிக்கவென்று நேரம் குறிக்கப்பட்டிருக்கும். ஆனால் ஆடம்பர வார்த்தைப்பாடு கொடுத்தபின் பொது அறிவுக்குரிய எதையும் பிரியப்படி படிக்கலாம். சோம்பேறித்தனத்தை உண்டாக்கக்கூடிய அனாவசியமான வாசிப்புகளை மறுத்துத்தள்ளி, அதிக கவனத்துடன் சத்திய வேதாகமங்களையும், இயற்கை சாஸ்திரத்தையும் கற்றுக்கொள்கிறார்கள். பக்திமார்க்கத்துக்குரிய சாஸ்திரங்களையே தன்னுடையதென ஒவ்வொருவரும் சிரமேற்கொள்கிறார்கள். வெவ்வேறு காலங்களிலுள்ள கர்த்தூஸிய சபையாரின் தினசரிக் குறிப்புக்கள் அவர்களது படிப்பின்மட்டிலுள்ள பிரீதியைக் காட்டுகின்றன. இதில் ஒன்றும் பிரமாதமில்லை. ஏனென்றால் அர்ச். புருனோவே (*St Bruno*) தன் காலத்திய பேரறிஞருள் ஒருவர். "அவர் தன் சீஷர்களுக்கு படிப்பில் பிரீதியை உண்டுபண்ணத்தக்க முன்மாதிரிகையாக விளங்கித் துலங்குகிறார்" என்று பிரான்ஸ் தேச கல்வி சமுதாய சரித்திரத்தில் டோம் ரீவே (*Dom Rivet*) எழுதியிருக்கிறார். அதோடு அர்ச். புருனோ அர்ச். சின்னப்பருடைய நிருபங்களுக்கும், சங்கீதங்களுக்கும் உரை எழுதியிருக்கிறார்.

கர்த்தூஸிய சபையின் ஒழுங்குப்பிரகாரம் துறவிகள் கைவேலையையுங்கூட செய்கிறார்கள். ஆனால் தனி ஜீவியத்திற்கு

விக்கினமாயிருக்கும் கஷ்டமான தோட்ட வேலையாவது, வேறெந்தத் தொழிலாவது அவர்கள் செய்யவேண்டுமென்பதில்லை. கர்த்தூஸியர் தனக்குக் கொடுத்திருக்கும் பெரிய அறையை ஒரு ஒழுங்குத் திட்டமாய் வைத்துக்கொள்ளவேண்டும். தனக்கு யாதொரு அலுவலின் நிமித்தம், விறகு வேண்டியிருக்குமாயின் தானே மரங்களை வெட்டி விறகுபார்த்துக்கொள்ளவேண்டியது. தன்னிடம் ஒப்புவித்திருக்கும் சிறிய தோட்டத்தின் வேலைகளைத் தானே பார்க்கவேண்டியது. வேதபோதகர்களுக்கு உபயோகப்படக்கூடிய சித்திரச் சாமான்களையும் அவர்கள் செய்வார்கள். சுருபங்களுக்கு வர்ணம் கொடுக்கலாம் அல்லது சுருபங்களையே செய்யலாம். நவசந்நியாசத்திலிருப்பவர்கள் அவ்வேலைகளை அடிக்கடி மனவல்லய ஜெபத்தினுல் பரிசுத்தப்படுத்தவேண்டும். அவர்கள் அன்புடனும், ஜாக்கிரதையுடனும் எந்தவிதத்திலும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்.

ஒரு கர்த்தூஸியர் ஆகாரம் தபத்துக்கடுத்ததாயிருக்கும். அவர்களுக்கு மாமிச சாப்பாடு கிடையவேகிடையாது. இந்தவிதத்தில் ஒழுங்கு மாறவே மாருது. கடின வியாதியாயிருந்தாலும் சரி, அல்லது பிரயாணம் பண்ணிஞலும் சரி, எக்காரணத்தை முன்னிட்டும் அதற்கு யாதொரு விலக்கமும் கொடுக்கப்படமாட்டாது.

இம்மாதிரி இடைவிடாது இறைச்சியின்றி உபவாசம் இருப்பதுடன் இன்னொரு பெரிய உபவாசம் ஒன்று இருக்கிறது. அது செப்டம்பர் மாதம் 14-ம் தேதியிலிருந்து, அதாவது திருச்சிலுவை உயர்த்தப்பட்ட திருநாளிலிருந்து, பாஸ்கு திருநாள் வரை நீடிக்கும். ஏறக்குறைய எட்டு மாதம். இக்காலத்தில் ஞாயிற்றுக்கிழமைகளிலும், சில பெரிய திருநாட்களிலும் தவிர, மற்ற நாட்களில் ஒரு கர்த்தூஸிய துறவி ஒரு நாளைக்கு ஒருமுறை மாத்திரம் முழுச் சாப்பாடு சாப்பிடுகிறுர். சாயங்காலத்தில் கொஞ்சம் சிற்றுண்டி சாப்பிடலாம். இம்மாதிரி ஞாயிற்றுக்கிழமைகளிலும் திருநாட்களிலும்கூட பால், பால்கட்டி, வெண்ணெய், முதலியவை அறவே ஒழிக்கவேண்டும். வருடத்திலே சகல வெள்ளிக்கிழமைகளிலும், மகா பெரிய திருநாட்களிலும்கூட இவ்விலக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது. கடைசியாக வழக்கமாய் வெள்ளிக்கிழமையில் (வாரத்துக்கொருமுறை) ஒரு கர்த்தூஸியர் கடின உபவாசமாயிருக்கிறுர். சரீர சௌக்கியத்தை முன்னிட்டு ஒரு துறவி இவ்வுபவாசத்தை அனுஷ்டிக்கமுடியாமலிருந்தால், ஒவ்வொரு தடவையும் மடத்துத் தலைவரிடமிருந்து உத்தரவு பெற்றுக்கொள்ளவேண்டும்.

ஆனால் இச்சபையில் சேர ஆசிக்கும் இந்தியர் மேற்கூறிய தபசு, ஒறுத்தல், உபவாசம், முதலியவற்றின் விருத்தாந்தத்தைப் பார்த்து பயப்படவேண்டாம். ஏனெனில் 1938-ம் ஆு பெப்ரவரி மீ 6-ம் தேதியன்று எழுதிய கடிதத்தில், கர்த்தூஸிய சிரேஷ்டர் கூறுவதாவது "இக் கடுமையான பழக்கங்களைப்பற்றி இரண்டு காரணங்களை முன்னிட்டு அதிகமாக வற்புறுத்த அவசியமில்லையென்று நினைக்கிறேன்". முதலாவது:—மேற்கூறியவைகளை நாம் சொல்லும்பொழுது அது நமக்குக் கஷ்டமாய் தெரிந்தாலும் அநுபவத்தில் அவ்வளவு கஷ்டமில்லை. பெரிய தபசு முயற்சிகள் செய்யவேண்டுமென்பது கர்த்தூஸிய நோக்கமல்ல. ஆனால் கடவுளோடு ஐக்கியமாய் ஜீவித்தலே, கர்த்தூஸிய சபையின் முக்கிய நோக்கம்.

இரண்டாவது:—"நம்முடைய கடும் பழக்கவழக்கங்களின் நோக்கத்தை நமது தேசத்துப் பழக்கவழக்கங்களுடன் ஒப்பிட்டுப்பார்த்தால், அவ்வளவு கஷ்டமாய்த் தோன்றாது; வெவ்வேறு ஆஷ்ரமங்களில் வெவ்வேறு சிறு பழக்கவழக்கங்கள் இருப்பதைப்போல், நம்முடைய பழக்கத்திலும் சில மாறுதல்களிருக்கின்றன.

அவைகள் முக்கியமானதல்லவாயின் நாட்டுக்குத் தகுந்தபடி மாற்றிக் கொள்ளப்படும். நமது சொந்த இந்திய கர்த்தூஸியராகிய டோம் பிரான்சிஸ் க்ஷேவியர் கோமெஸ் கூறுவதாவது (1938-ம் ஆு மார்ச்சு-மீ 24-ம் திகதி கடிதத்தில்), "நான் இச்சபையில் சேர்ந்து இப்பொழுது ஏறக்குறைய நான்கு வருடங்களாகின்றன. யாதாம் ஒருவர் இச்சீவியத்தைக் கைக்கொள்ளுகிறபொழுதும், கர்த்தூஸிய ஜீவியத்தின் கடும் பழக்கவழக்கங்களைப்பற்றி வாசிக்கும்பொழுதும் அவர் நினைக்கிறப்போல் அவ்வளவு பிரமாண்டமாய் இருக்கிறதில்லை."

யாதொரு விசேஷித்த காரணமின்றி ஒரு கர்த்தூஸியர் தன்னுடைய அறையைவிட்டு வெளியேறுவதில்லை. அவர் நற்சுகமாயிருக்கும்பொழுதும் அந்த அறைதான் அவருடைய வாசஸ்தலம். அவர் வியாதியாய் விழுந்தாலும் அதுதான் அவருக்கு வைத்தியசாலை. நற்சுகமாயிருக்கும்பொழுது அவருக்கு அவர்தான் வேலைக்காரன். தன்னுடைய சகோதரர்களுடன் சேர்ந்து சாப்பாட்டு அறையில் சாப்பிடுகிறநாள்தவிர, மற்ற நாட்களில் அந்த அறைதான் அவருடைய சாப்பாட்டு அறை. அறைக்குள் செல்லுகிற கதவுக்குப் பக்கத்தில் சுவரிலுள்ள ஒரு துவாரத்தின் வழியாய் ஆகாரங்கள் கொடுக்கப்படும். வெளியிலிருந்து வேறு என்ன வேண்டியிருப்பினும் இந்தத் துவாரத்தின் வழியாய்த்தான் பெற்றுக் கொள்வார்.

(2) பொது ஜீவியம் (*Cenobitical Life*)

கர்த்தூஸிய சபையில் இருப்பவர் பொது ஜீவியத்தின் நன்மைகளையும் அனுபவிக்கின்றார். எப்படியெனில் "தேவ

தோஸ்திரக் கீதங்கள்" (*Divine Office*) பாடும்பொழுதும், திவ்வியபலிபூசை காணும்பொழுதும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்ற விசேஷ திருநாட்களிலும் மத்தியான போஜனம் அருந்தும்போதும், இவ்விருதிறமான நாட்களில் குறிக்கப்பட்ட காலத்தில் கொடுக்கப்படும் சம்பாஷணை நேரங்களிலும், வாரத்தில் ஒரு நாள் உலாவப்போகும் சமயங்களிலும், ஒவ்வொரு துறவியாரும் தங்கள் தங்கள் தனி அறைகளை விட்டுக் கூட்டமாகக் கூடுகின்றனர்.

"தேவ கீதம்" (*Divine Office*)

அவர்கள் மடத்தின் விருதுவாக்கியம் "சகல வேலைகளிலும் தேவகீதமே முக்கியமானது, இதுவே முதலிடம் வகிக்கவேண்டியது" என்பதேயாகும். இதைத்தான் நமது தாயாகிய திருச்சபை அவர்களுடைய அந்தஸ்தின் வேலையாக ஏற்படுத்தியிருக்கிறது. உலகம் கடவுளுக்குப் புரியவேண்டிய இந்த வேலையைத்தான், கர்த்தூஸிய மடத்தார் புரியவேண்டும் என்று திருச்சபை கட்டளை சுமத்துகிறது. திருச்சபையின் மற்ற எந்த விரத்தத்துவ சபையினரும் இந்தக் கர்த்தூஸியரைப்போல் இவ்வளவுநேரம் இரவை சங்கீத ஜெபத்தில் கழிப்பதில்லை. தினமும் ஒரு கர்த்தூஸிய துறவியார் தேவ சங்கீதம், மாதா சங்கீதம், மரித்தவர்களின் சங்கீதம் இவைகளைப் பாடுவதில் சாதாரணமாய் ஆறு மணி நேரத்திற்குக் குறையாமல் செலவழிக்கிறார். இந்தச் சங்கீதங்கள் எல்லாம் ஒரேமாதிரியாக பிழையின்றி பாடப்படுகின்றன. மரித்தவர்களின் சங்கீதத்தை அறையில் தனியாகவும் பாடலாம். இவைகள்தான் அவர்களுடைய முக்கிய கடமை.

கடவுளின் ஞானப் போரை நடத்தும் மகத்துவமான சேனைகளுக்குள்ளும் கர்த்தூஸியன் சேனையே முக்கிய இடம் வகிக்கிறதென்றும் சொல்லலாம். அவர்கள், போருக்கென்று கட்டப்பட்ட கோட்டையின்மீது ஏறிக்கொண்டு ஞான விரோதிகளை வெற்றிபெறவிடாமல் விரட்டுகின்றனர். "உனது மதில் சுவர்களின்மீது, ஓ! ஜெருசலேமே, காவற்காரர்களை நியமித்திருக்கிறேன், பகல் முழுவதும், இரவு முழுவதும் அவர்கள் மன நிம்மதியாக இருக்கமாட்டார்கள்," (இசையாஸ் 62: 6) ஜெபமே இச்சபை துறவியாருடைய பெரும் வெற்றிதரும் ஆயுதம். யார், யார் குன்று விசுவாசமுடையவர்களாயிருக்கிறார்களோ அவர்கள் இதை அறிவார்கள். மேலும் விசுவாசம் தளர்ச்சியடைந்

அர்ச். புருனோ

ஹூடோன் என்ற சித்திரக்காரரால் செய்யப்பட்ட ஓர் நேர்த்தியான புருனோ சுரூபம், ரோமாபுரி அர்ச். சம்மனசுக்களின் இராக்கினி கோவிலிலிருக்கிறது. அந்தச் சுரூபத்தின் சாயலே மேலே காணப்படும் படம்.



கர்த்தூஸியத் துறவிகளுடைய ஆசிரமத்தின் உட்பாகம்.

1. மடத்தின் உள்ளே செல்ல கதவு
2. போஜன பதார்த்தங்கள் கொடுக்க அரைக்கதவு
3. மெத்தைமேலேற படிக்கட்டு
4. முதல் அறை
5. இரண்டாம் அறை
6. படிக்குமிடம்
7. மரப்பலகையிருக்கும் அறை
8. தச்சுவேலை செய்யுமிடம்
9. தோட்டம்.

துள்ள இக்காலத்திலும் ஒருநாளும் ஜெபிக்காதவர்களுக்காக கடவுளை மன்றாடும் இச்சபையாரின் ஜெபஜீவியம் இவர்களுக்கு அலங்காரமான முடிபோல் துலங்குகின்றது. இச்சபையார் மடத்தைச் சந்திக்க நேர்ந்தவர்கள்கூட இராத்திரியில் இச்சபையார் பாடும் கீதங்களைத் தாங்கள் கவனிக்கையில், ஏதோ பெரும் உணர்ச்சி தங்கள் உள்ளத்தில் எழும்புவதால் பிரமித்துப்போகிறார்கள். இந்த விஷயத்தைப்பற்றி எத்தனையோ அத்தாக்ஷிகளை அவ்வாஷ்மரத்துத் தினசரிக் குறிப்புப் புத்தகங்களில் (*Diary*) நாம் பார்க்கிறோம்! எத்தனையோ அத்தாக்ஷிகள் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. சந்தேகமில்லாமல் உண்மையாகவே இந்தக் காக்ஷி மனதை உருக்கக்கூடியது.

கடைசித்தரமாக இரவு 10-45 அல்லது 11-30 மணிக்கு, ஒவ்வொரு நாளின் திருநாட்களுக்கு ஏற்றவாறு, மணி அடித்தவுடன், ஒவ்வொரு துறவியாரின் அறையின் கதவும் திறக்கப்படுகிறது. ஒவ்வொருவருடைய கையிலும், மினுக்கு மினுக்கு என்றெரியும் சிறு விளக்கின் வெளிச்சமே அம்மடத்தின் வெளிச்சம். பாடகர்களுடைய இடங்கள் விரைவில் நிறையப்படுகின்றன. வார்த்தைப்பாடு கொடுத்தவர்கள் வெள்ளை உடை அணிந்திருக்கிறார்கள். நவசந்நியாசத்தில் இருப்பவர்களோ கறுப்புக் காப்பாவினால் தங்களை முழுவதும் மறைக்கும்படி உடை தரித்திருக்கிறார்கள். கோவிலோ ஏறக்குறைய முழு இருட்டாக இருக்கிறது. ஸ்தாபக விளக்குகளில் இருந்துவரும் வெளிச்சமும், கம்மலானதும் இறக்கத்திலுள்ளதுமான பாடகர்களுடைய விளக்குகளின் வெளிச்சமும் கீதப்புஸ்தகங்களில் மாத்திரம் படும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

சற்று நேரம் மிக்க அமைதியாய் யாதொரு சப்தமுமின்றி இருந்த பிற்பாடு, கீதப்பாடல் ஆரம்பிக்கிறது. முழுக் குரலுடனும், தொடர்ந்த சப்தத்துடனும் பாடுகிறார்கள். வாத்தியக் கருவிகளுடன் பாடப்படாத சாதாரணப் (*Plain Chant*) பாட்டுகளைக் கேட்டிராத ஒருவருக்கு, இவர்களது பாடல் மிகவும் உருக்கமாகப் பாடப்படுவதாகக் காணப்படுகிறது. உண்மையாகவே சந்நியாசத்துவம் இவர்கள் பாடும் வகையில் வெளிப்படுகிறது. சந்நியாசிவாழ்வின் தவக்குறியே இதில் புலப்படுகிறது. முதலில் கடவுளைத் துதிக்கும் உன்னதப் புகழ்ப்பாக்களுடன் சப்தம் உயர்கிறது. பின், தாழ்மையான மன்றாட்டுப் பாக்களுடன் சப்தம் குறைகிறது. அல்லது மறுபடியும் துக்கத்துக்குரிய மனஸ்தாபப்பாக்களிலோ, அல்லது இருதயம் உணர்ந்த அன்பின்

பாக்களிலோ முடிகிறது. 'பெரிய சார்ட்ரஸ்' கோவிலிலே கர்த்தூஸியரது கீதக்கூட்டத்தைப் பார்வையிட்ட பிரயாணி ஒருவர் பின்வருமாறு எழுதுகிறார்: "விளக்குகள் அணைகின்றன, அல்லது மங்கலாக இருக்கும்படி மறைக்கப்படுகின்றன. தேவ நற்கருணை விளக்கொன்று எரிந்துகொண்டிருக்கிறது. ஆகவே பாடகர்கள் இடத்தில் ஏதோ மங்கலான மனித உருவங்கள் மாத்திரம் காணப்படும். அக்கூட்டத்தை சுவர்களின்மேல் அசையா நிழல்களென்றே நீர் சொல்லக்கூடும். இதெல்லாம் உமது மனதைக் கலங்கச் செய்யலாம். தனது கடமைகளைப் பற்றி, யாதொரு கவலையுமில்லாத ஓர் நிர்ப்பாக்கியமான மனிதன்கூட ஏதோ தெய்வபயமும், வேத உணர்ச்சியும் தன் உள்ளத்தில் எழும்புவதாக உணரக்கூடும்." (ஆல்பர்ட் து புவா, பெரிய சார்ட்ரஸ் P. 124) இராச் சங்கீதத்தைக் கேட்கப் பாக்கியம்பெற்ற, பிரடரிக் ஓசனம் "கர்த்தூஸியருடைய ஒரு சங்கீதப் பாடலே உலகத்தின் பாவங்களெல்லாவற்றிற்கும் பரிகாரம் செய்யப் போதுமானது" என்று ஆனந்த பெருமூச்சு விட்டார்.

ஒரு கர்த்தூஸியர் அதிக ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருப்பது இராச் செபத்திற்குக் குறிப்பிட்ட நேரம். அதுவே அவருடைய ஆறுதலான நேரம். மாய உலகம் தனது கெட்ட இன்பங்களையும் அக்கிரமங்களையும் ஆரம்பிக்கவும், சில கிறீஸ்துவர்கள் தங்களுடைய தூக்க நேரத்தைப் பரிசுத்தப்படுத்தவும் நினைக்கிற அதே இராச்சமயமாகிய இரவிலேயே, கர்த்தூஸியருடைய நாள் துவக்குகிறது. பின்பு அவர் ஆவலுடன் பாட்டுப் பாடும் இடத்திற்குச்சென்று, கீதத்தின் ஒவ்வொரு வாக்கியமும் இனிமைதரும் விதத்தில் ஆழ்ந்த கருத்துடனும் பக்தியுடனும் பாடுகிறார். இந்த இராச்செபம் திருநாட்களின் தன்மைக்குத் தக்கபடி $2\frac{1}{2}$ அல்லது 3 மணி நேரம் நீடித்திருப்பதாயிருந்தும், அது அவருக்கு அதிக நேரமாய்த் தோன்றுகிறதில்லை. அவருடைய அந்தஸ்தின் முக்கிய இந்த அலுவலை நிறைவேற்றுவதற்கு அவர் தெரிந்துகொள்வது செபம், தியானம், கீதம். இவைகள் அவரை எப்போதும் கடவுளின் சந்நிதானத்தில் சேர்த்து, அவருடைய ஆத்துமத்தை ஞான சந்தோஷத்தால் நிரப்புகின்றன. கர்த்தூஸியர் டேனிஸ், காலை ஆராதனை ஜெபத்தைப்பற்றியும், ஜெபிக்கும் தோத்திரத்தைப்பற்றியும் சொல்வதில் பின்வருமாறு எழுதுகிறார். "ஒவ்வொரு நாழிகையும் செபத்தாலும், தியானித்தலாலும், கீதம் பாடுவதாலும் நமது இருதயங்களை கடவுளுடன் சேர்க்கப் பழகுவோம்."

கடவுளுடைய ஆராதனைக்கு மற்ற இடங்களில் செய்வது போல், வெளி ஆடம்பர அலங்காரங்கள் கர்த்தூஸிய மடத்தில் கிடையாது. கண்ணைக் கவரும் அழகிய வஸ்துக்களின் வெளிக் காக்ஷியும் இல்லை. சங்கீதம் பாடுவதற்கு உதவியாக இருக்கும் வாத்தியக்கருவிகளும் இங்கு கிடையாது. ஆடம்பரச் சடங்கை அதிகமாய் அகற்றியிருப்பதின் நோக்கத்தைக் கற்பனைசெய்வது கஷ்டம். பெரிய திருநாட்களில் நான்கு மெழுகுவர்த்திகள் திவ்யநற்கருணையின் முன்பாக எரிவதே போதிய வெளிச்சம். கதிர்ப்பாத்திரமும், குருக்கள் திவ்வியநற்கருணை ஆசீர்வாதத்திற் குத் தரித்துக்கொள்ளும் காப்பாவும் கர்த்தூஸிய மடத்தில் கிடையவே கிடையாது. இருந்தபோதிலும், கர்த்தூஸியரின் ஆராதனையில் ஆடம்பரமற்ற மகிமை இருக்கிறது. இந்த ஆரா தனை தற்காலத்தில் விசித்திரமாகப் பெருகியுள்ள ஜோடனை யைப் பார்க்கிலும், மேன்மையான விதத்தில் அதிக உருக்கத் துடனும் பக்தியுடனும் செபங்கள் செய்வதற்குப் போதுமான தாய் இருக்கிறது.

கர்த்தூஸிய சபை விசாரணைக் குருவானவர் திரும்பவும் தமது சபைச் சகோதரர்களை ஒவ்வொரு நாளும் காலை 7 மணிக்கு பொதுத் திவ்விய பூசைக்குக்கூடும் சங்கீத கூட்டத்தி லும், கடைசியாக பிற்பகல் $2\frac{3}{4}$ மணிக்கு நடக்கும் மாலை ஆரா தனையிலும், சந்திக்கிறார். இதுவே சாதாரண நாட்களில் அனு சரிக்கப்படும் ஒழுங்கு. பெரிய திருநாட்களில் தேவ ஆராதனை இருக்கும் முழு நேரத்திற்கும், கீதம் பாடுவதற்கும் சபையோர் வரவேண்டும். அன்று எப்போதும் மாலை ஆராதனை இருக்காது. ஆகையால் குருவானவர் குறைந்தது $6\frac{1}{2}$ மணி நேரம் கோவி லில் இருக்கிறார்.

ஞாயிற்றுக்கிழமைகளிலும், பெரிய திருநாட்களிலும் சர்த் தூஸிய சகோதரர்கள் சாப்பாட்டறையில் ஒன்றாய்ச் சேர்ந்து சாப்பிடுகிறார்கள். அப்போது முற்றிலும் மௌனம் அனுசரிக் கப்படுகிறது. கோவிலில் செபம் நடக்கும் சமயத்தில் பாடுகிற அதே தொனியில், இங்கு இருவர் லத்தீன் பாஷையில் பாடும் சப்தம்மட்டும் கேட்கப்படும். இந்த நாட்களில் பொது ஓய்வு நேரமிருக்கிறது. இதுவே ஒருவரோடொருவர் பேசுவதற்கு உத்திரவான நேரம். சபையின் ஒழுங்குப்படி மற்றச் சமயங் களில் அனுசரிக்கவேண்டிய கடின மௌன சட்டத்திற்குச் சிறிது மாறுதல் அளிக்கும்படியாய் இந்த ஓய்வுநேரம் தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது. இதோடுகூட வாரத்திற்கு ஒரு

தடவை வேலையில்லாத முதல் நாளில் சபைக்குருக்கள் வெளியில் உலாவிவரச் செல்லுகிறார்கள். இந்த உலாத்தல் 3½ மணி நேரம் வரை நீடித்திருக்கும். இந்நேரத்தில் அவர்கள் ஒருவரோடொருவர் சம்பாஷிப்பதற்குப் பூரண உத்தரவு உண்டு. அவர்களின் மகிமைக்குத் தகுந்த நடை இதுவே எனலாம்.

இவ்விதமாக, தங்களுடைய கூட்டங்களில் நின்று, தன்னுடைய சிறிய வீட்டை நோக்கித் திரும்பும் தனிவாசியானவர், (ராயல்) தீர்க்கதரிசியின் வாக்கியத்தின்படி, பின்வருமாறு கடவுளைப் பிரார்த்திக்கலாம்.—"சகோதரர்கள் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் இன்பமுமாயிருக்கின்றது" (132-ம் சங். 1-ம் வச.)

III

கர்த்தூஸிய சபையில் சேர்தல்

சபையில் சேருவதற்குரிய நிபந்தனைகள் :—கர்த்தூஸிய சபையில் சேர்ந்தோர்களின் ஜீவியத்தை நாம் நன்கறிந்திருப்பதால், அச்சபையில் சேருவதற்குரிய நிபந்தனைகளையும் கவனிப்போம்.

(1) பாடும் துறவிகள் (*Choir Monks*)

ஒருவர் ஒரு கர்த்தூஸிய மடத்தில் நவசந்நியாசியாக பாடகர் வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு, தமக்கு அத்தகைய ஜீவியத்திற்கடுத்த நற்குணங்களுள்ளனவா என்றும், அதில் சேருகிறதற்கு தாம் அத்தியாவசியமான கீழ்க்கண்ட நலன்களை உடையவராயிருக்கிறாராவென்றும் ஆராயவேண்டும்.

1. சரியான வயது :—சபையின் சட்டப்பிரகாரம் அதில் சேருவோரின் வயதைப்பற்றிக் குறிப்பிடுவோம் : 20 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களைச் சபையில் சேர்த்துக்கொள்ளும் வழக்கம் இல்லாதிருந்தாலும், இப்பிராயத்திற்கு இளமையான ஒருவர் சபையிற்புக ஆசிப்பாராகில், சபை அதிசிரேஷ்ட சுவாமியாரும், மற்றும் பெரியோரும் கூடி, அவர் கல்வியறிவிலும், பக்தியிலும், நீதிமுறைகளிலும், சபைச் சட்டங்களை அனுசரிக்கத்தக்க தேகதிடத்திலும் முதிர்ந்தவராகவுமிருக்கக்கண்டால், அவரைச் சேர்த்துக்கொள்ளலாம். ஆனால் அவர் 18 பிராயமேனும் அடைந்திருக்கவேண்டும்.

2. கல்வித் தேர்ச்சி :—முதல்தரமாகக் கலை பயின்றவராயும், லத்தீன் பாஷையில் முதிர்ந்த அறிவுடையோராயும், இருக்கவேண்டும்.

இன்றேல் லத்தீன் பாஷையில் கற்பிக்கப்படும் தத்துவ சாஸ்திரம், வேத சாஸ்திரம், முதலியவற்றை அவர் அறிவது கூடாததன்றே!

3. திருச்சபையால் இப்பரிசுத்த சபையில் அவர் சேர்வதற்கு விலக்கப்பட்டிருத்தல் கூடாது. ஏனெனில் இதில் பாடகர்களாகச் சேரும் நவசந்நியாசிகள் நாளடைவில் திவ்வியபலிபூசை ஒப்புக்கொடுக்கும் குருக்களாக இருக்கவேண்டியவர்கள்.

4. பக்திரஸ பாடல்களை பாடக்கூடியவராக இருக்கவேண்டும். சாதாரண பாட்டிலேனும் அவர் தேர்ந்த பழக்கமுடையவராயிருத்தல் அவசியம். ஆனால் அவர் நவசந்நியாசியாயிருக்கும்போதே அங்குள்ள பாட்டுக்களைப் பயின்று போதிக்கப்படுகிறபடி பாடவேண்டும்.

5. ஆரோக்கிய தேகம்:—சுகமாகக்கூடாத நோய்க்கு அவர் ஆளாயிருத்தல் கூடாது. திடகாத்திர தேகமுள்ளவர்களே கர்த்தூவிய ஜீவியத்தை கஷ்டமின்றி அனுசரிக்கமுடியும் என்பது நாம் கண்ட அநுபவ சத்தியம்.

6. சற்குணம்:—சபையில் நீதிக்கும் நியாயத்திற்குமடுத்த கட்டளைகளே அவருக்கு விதிக்கப்படும். அக்கட்டளைக்கு அவர் பரஸ்பர எண்ணத்தோடு கீழ்ப்படிய தம்மை ஒப்புக்கொடுக்கவேண்டும். பழக்கத்தாலும், இயற்கையாலும் எல்லாரோடும் நல்லெண்ணத்துடன் பழகி அன்னியோன்னிய ஐக்கியமுடையவராயிருக்கவேண்டும்.

7. தம் கடன்கள் யாவற்றையும் ஏற்கெனவே தீர்த்திருக்கவேண்டும்.

இந்திய அபேக்ஷகர்களுக்கு ஆலோசனைகள்

சபையில் சேர விரும்பும் இந்தியர்களின் சௌகரியத்திற்காக சில அநுஷ்டானத்திற்குரிய ஆலோசனைகளைச் சபை சிரேஷ்டர் சேர்த்திருக்கிறார். பின்வரும் வாக்கியங்கள், அவர் 1938-ம் ௵ ஜூன்-௴ 14-ம் ௳ எழுதிய கடிதத்தில் கண்டவை: "கர்த்தூவிய துறவியாக விரும்புபவர் பரந்த பொது அறிவு உடையவராகவும், உறுதியான விசுவாசம் உடையோராகவும், ஆத்துமாக்களை இரட்சிப்பதற்கும், சர்வேஸ்பரனை மகிமைப்படுத்துவதற்கும், செபத்திலும், தேவ ஐக்கியத்திலும் நம்பிக்கை உடையோராகவும், இருக்கவேண்டும். அந்தஸ்தின் கடமைகளைச் சரிவர நிறைவேற்றுவதே தேவ வரப்பிரசாதம் பெறும் வழியாகையால், அவர் இதர அலுவல்களில் கவனம்செலுத்தக்கூடாது. ஜீவியத்தின் கஷ்டங்களையும், சீதோஷ்ண நிலையின் வித்தியாசங்களையும் அவர் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொண்டு, தன்னை அதற்கேற்றவாறு சரிப்படுத்திக்கொள்ளத் தயாராயிருக்கவேண்டும். எவ்வித கஷ்டமான சட்டத்திற்கும் இணங்கி நடப்பவராயிருக்கவேண்டும். சர்வேஸ்பரன் அவருக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமாயிருக்கும்படி, தானும் தன்னை முற்றிலும் சர்வேஸ்பரனுக்கு அர்ப்பணம் செய்திருக்கவேண்டும். தன் தேகத்தை முழுதும் தியாகம்செய்யத் தயாராயிருக்கவேண்டும். தான் இந்தியாவுக்கேயன்றி எங்கனுப்பப்பட்

டாலும், அங்கே தேவ ஊழியத்தைச் சரிவரப் பரிபாலிக்கவேண்டும். பழமையிலேயே கத்தோலிக்கனுயினும், புது கத்தோலிக்கனுயினும், சுக சரீரமும், பாடும் திறமையும், சங்கீதம் கற்கும் சக்தியும், லத்தீனில் விசேஷ அறிவும், இவற்றிற்குமேலாக அத்தியாவசியமானவை. ஆயினும் பந்தய விளையாட்டுப் பிரியமும், தேசீய விவகாரப் பிரியமும் இதற்கு விரோதமானவையென்று கிஞ்சித்தேனும் எண்ணலாகாது.

ஒரு அபேக்ஷகரின் முழுவிபரச் சீட்டு

கர்த்தூஸிய மடத்தில் கர்த்தூஸிய துறவிகளாகச் சேர விரும்புவோர், பின்வரும் கேள்விகளுக்கு நேர்மையான விடையளிக்கக்கடவர்.

"எந்த கர்த்தூஸிய சபையும், அதில் சேர விரும்புவோர் பதினைந்து வயதுக்குமேல் எங்கு வசித்தனரோ, அந்த எல்லை ஞானஅதிகாரிகளின் அத்தாக்ஷிபத்திரமின்றி, அவர்களைச் சேர்த்துக்கொள்ளவோ அல்லது உடுப்புத் தரிக்கச்செய்யவோ கூடாதென்று திருச்சபைச் சட்டம் 544 கூறுகின்றது." மேலும் அச்சபை அதிகாரிகளுக்கு உதவியாய் இருக்கும்படியாயும், அம்மனுதாரின் விசேஷ குறிப்புகள், நன்னடத்தை முதலியவைகளைப் பற்றியும், அவர் அந்த அந்தஸ்திற்கு அழைக்கப்பட்டவரா இல்லையாவென்ற காரியத்தை நன்குய் அறியும்படி, பின்வரும் கேள்விகளுக்கு நேர்மையான பதில் அளிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

1. முழுப் பெயர், பிறந்த தேதி?
2. ஞானஸ்நானம் பெற்ற தேதி?
3. பிறந்த இடம்? ஊர்? பங்கு? மேற்றிராசனம்?
4. பெற்றோரின் முழுப் பெயர் யாது? இன்னும் வசிக்கிறார்களா?
5. சகோதரர்கள், சகோதரிகள் எத்தனை பேர். அவர்கள் அந்தஸ்தை தெரிந்துகொண்டார்களா?
6. முன் படித்த பள்ளிக்கூடத்தின் பெயர்?
7. பதினைந்து வயதிலிருந்து வசித்த இடம் யாது? வசித்த காலம் அந்த மேற்றிராணியாரின் விலாசம் குறிக்கவும்.
8. என்ன அலுவல் செய்து வந்தீர்?
9. எந்த சந்நியாச சபையிலாவது, அபேக்ஷகராகவும் அல்லது சோதனையில் இருப்பவராகவும், சாதாரண வார்த்தைப்பாடு எடுத்தவராகவும் இருந்ததுண்டா? எந்த சந்நியாச மடத்தில் இருந்தீர்? எவ்வளவு காலம்? வார்த்தைப்பாட்டை நீக்கியிருந்தால் அந்த தேதியையும் குறிக்கவும்.

10. ஒரு துறவியாக எவ்வளவு காலமாய் ஆசையாய் இருக்கிறீர்?
11. மற்ற சபையைவிட இதை மேலாக விரும்புவதேன்?
12. தனி ஜீவியம் ஜீவிக்கவும், கடவுளின் புகழைப்பாடவும் ஆசையுண்டா? பாட்டுப்பாட இயலுமா? குருத்துவம் பெறுவதற்கு உமக்கு சரீர அல்லது ஞானத்தடையுண்டா?
13. உம்மை சம்மந்தப்பட்டமட்டிலும், பண விஷயத்திலும் ஏதாவது தொந்தரவு உண்டா?
14. எப்போதும் நல்ல சுகம் உடையவரா?
15. தயவுசெய்து அத்தாக்ஷிப் பத்திரங்கள் அளிக்கவும்.

மடத்தில் பிரவேசம்

கர்த்தூஸிய மடத்தில் சேர்க்கப்படுவதற்கு ஒருவர், அபேக்ஷகராய் நிற்கிறார் என்று வைத்துக்கொள்வோம். மடத்துத் துணைப் பரிபாலிப்பவர், அவரைத் தமது இல்லத்தில் சேர்த்துக்கொண்டு, சிலநாள் தியானம் செய்விக்கிறார். சில சிறிய பரீக்ஷையும் செய்கிறார். எல்லாம் சரியாயிருந்தால், மடத்துச் சிரேஷ்டரிடம் கொண்டுபோகப்பட்டு, கர்த்தூஸிய ஜீவியத்திற்குத் தகுதியுள்ளவரா என்று பரீக்ஷிக்கப்படுகிறார். மடத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்குப் போதுமான விபரங்கள் உடையவராயிருந்தால், மடத்து ஞானத் தந்தையிடம் அனுப்பப்படுகிறார். பிறகு நவசந்நியாசிகளின் தலைவரிடம் அனுப்பப்படுகிறார்; அவர் அபேக்ஷகரின் பாதங்களைக் கழுவி, கர்த்தூஸியர் வெள்ளை மேல்சோடு அணிவித்து, ஒரு நீண்ட கறுப்பு அங்கியை, அவர்களுடைய சாதாரண உடையை மறைக்கப் போட்டு, அக்ஷணத்திலிருந்து இப்புதிய அபேக்ஷகர் தங்க வேண்டிய சிற்றறைக்குக் கூட்டிக்கொண்டு போகப்படுகிறார்.

அவருடைய கர்த்தூஸிய மடத்து வாசம் ஆரம்பித்திருக்கிறது. இச்சீவியம் வழக்கமாக ஒரு மாதகாலம் நீடித்திருக்கிறது. இவர் இக்காலங்களிலும் தான் உபயோகிக்கும் சாதாரண உடையை அணிகிறார். சபையில் உட்பட்டவர்கள், பாட்டுப் பாட உதவிபுரியும்போதும், மற்ற வேத ஒழுங்குகளை அனுசரிக்கும்போதும், அவர் அணிந்திருக்கும் உடையை ஒரு கறுப்பு வஸ்திரத்தால் மூடுகிறார். ஒருவர், முன்னமேயே குருத்துவ அந்தஸ்தில் இருந்திருந்தால், இங்கு வந்து சேர்ந்தபின், பூசை செய்கிறதைத் தவிர, **"கர்த்தூஸியரின் சுதந்திரம்"** என்னும் புஸ்தகத்தில் உள்ள ஒழுங்குகளைப் படிக்கிறார். மேலும் இக்

காலங்களில் எல்லா அங்கத்தினர்களும் பாடிவரும் சாதாரண கீதங்களையும், சபையின் வெளியாடம்பரக்கொண்டாட்டங்களையும் கற்க ஆரம்பிக்கிறார்.

அதன்பின் அவர் ஒரு நவ சந்நியாசியாகச் சேருகிறார். அவர் முழங்காலில் இருந்து கழுத்துவரையிருக்கும் ஒரு வஸ்திரமும், தலையை மூடுவதற்கு அதோடு தொகுத்துள்ள மற்றோர் வஸ்திரமும் தரித்துக்கொள்கிறார். கீதம் பாடும்போதும், பொதுக் கூட்டம், மற்ற இடங்களிலும், பல சுருக்குப்பிடித்துள்ள கறுப்பு வஸ்திரத்தால் உடலை மூடுகிறார்.

அவரின் நவ சந்நியாச வாழ்க்கை ஒரு வருஷம் நீடிக்கும். ஆனால் சில சமயத்தில், கூட ஆறு மாதகாலமும் நீடிக்கலாம். இச்சமயங்களில், நவ சந்நியாசியார் தான் சபையின் அங்கத்தினராய்ச் சேரும்போது ஆரம்பித்த வெளியாசாரங்களையும், பாட்டுக்களையும், சபையின் முக்கிய அம்சங்களையும் தொடர்ந்து படிக்கிறார். அவர் சதா வேதாகமங்களையும், தேவ தோத்திர கீதங்களையும், அர்ச்சியசிஷ்டவர்களின் சரித்திரங்களையும், அவைகளின் வாசகங்களையும், தன்னடக்கம், வேதத்தின் ரகசியம், அவற்றின் இயற்கைகளைப்பற்றி உறுதியான வியாசங்கள் எழுதுவதிலும் நியமிக்கப்படுகிறார். இவ்விதமான திட்டங்களும், கடமைகளும் அவர் முதல் வருஷ சந்நியாசி அந்தஸ்திற்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கால அட்டவணை ஒழுங்காக செலவழிக்கப்படுவதால், முதல் வருஷம் காற்றினும் கடிது செல்லுகிறது.

இந்த நவசந்நியாசி மற்ற அங்கத்தினர்களால் ஓட்டுரிமைகளின்திட்டத்தின்படி சபையில் தெரிந்தெடுக்கப்பட்டதின்பின், அவர் சாதாரண வார்த்தைப்பாடு கொடுக்கிறார். அவர் எடுத்துக் கொண்ட பிரதிக்கினையானது ஸ்திரமாக இருப்பதோடு, கீழ்ப்படிதல், நன்மாதிரிகை, தரித்திரம், பரிசுத்ததனம் இவைகளைப் பகிரங்கமாக வெளிப்படுத்துகிறார். முதலில் அவர் எடுக்கும் இந்த பிரதிக்கினை மூன்று வருஷங்களுக்குமட்டுந்தான் நீடிக்கும், அதன்பின், ஒருவர் தப்பிதமாக இந்த அந்தஸ்த்தை தேர்ந்தெடுத்திருந்தால் சபையைவிட்டு விலகிக்கோள்ளலாம். அதன் பிறகு அவர் சபையில் ஸ்திரமாய் இருப்பேன் என்று கொடுத்த வார்த்தைப்பாடு அவரின் அந்தியகாலபரியந்தம், அவரைச் சார்ந்தது. மேலும் அவரது வார்த்தைப்பாடானது, சபையில் அவரது நிலை உறுதியைக் காட்டுகிறது. ஆகையால், அவரது வார்த்தைப்பாடானது வெளிப்படையான நிலை உறுதியாம். இந்த சத்திய உறுதிவாக்கு அவர் வெறுத்துத்தள்ளிய உலக காரியங்களின்

மேல் மனம், வாக்கு, காயத்தாலும், யாதொரு பற்று ஏற்படாத படி வற்புறுத்துகிறது. இதுதான் உள்தபசு. இதுதான் குறிக்கப்பட்ட காலத்துக்கு நிலைத்திருப்பது என்று அர்த்தம். மேலும் தன் நடத்தையைச் சீர்திருத்த எடுத்துக்கொள்ளும் வார்த்தைப்பாட்டால், பரிசுத்த ஜீவியத்திற்குமாத்திரமல்ல, அளவுகடந்த உத்தம ஜீவியத்திற்கே தன்னை ஆளாக்கிக் கொள்கிறார். அன்றியும் "தீமையை அகற்றி, நன்மையைத் தேடும்போது, நன்மையில் இருந்து மேலான நன்மையும், எல்லாவற்றிலும் சிறந்த நன்மையும், சம்மனசுக்கள் அடைந்துள்ள நன்மையையும் பெறுவர்," என்று காட்சியாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அன்றியும் "நீதிமான் இன்னும் அதிக நீதிமானாகட்டும், பரிசுத்தவான் இன்னும் அதிக பரிசுத்தவானாகட்டும்" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்விதம் அவர் தற்கால வார்த்தைப்பாட்டை கொடுத்த பிறகு அவர் ஜூனியர் அந்தஸ்து துறவியாகிறார். பின்பு நவசந்நியாசியாய் இருக்கும்போது உடுத்திய கருப்புக் காப்பாவும், கட்டையான சந்நியாசி-வஸ்திரத்திற்குப் பதிலாக, ஒரு நீளமான அங்கியையும் அணிகிறார். அதன் முன் பின் மடிகள் ஒரு முடிச்சால் இணைக்கப்பட்டிருக்கிறது. அவரது அங்கிப்பையானது நித்திய வார்த்தைப்பாடு கொடுத்தவர்களுடையதைவிட நீளமாயும், ஒடுங்கியும் இருக்கிறது.

மூன்று வருஷத் தற்கால வார்த்தைப்பாடு கொடுத்திருக்கும்போதே, சில முக்கிய அப்பியாசங்களையும், நவசந்நியாசிமார்களுக்குக் குறிப்பிடப்பட்ட ஒழுங்குகளையும் அனுசரிக்கிறார். அவர் ஒரு குருவானவராயிருந்தால், சபை ஒழுங்குகளையும், ஒறுத்தல் முயற்சிகளையும், திவ்விய வேதானந்தத்தையும்பற்றிப் படிப்பார். நவசந்நியாசம் துவக்கினவர்களுக்கு சிறிய உபதேசம் கொடுப்பதற்கு அழைக்கப்படுவார். நவசந்நியாசி அந்தஸ்தில் இருக்கும் ஒருவர், வேதப் படிப்புகளைப் படிக்குமுன்னால், தத்துவசாஸ்திரம் வேத சாஸ்திரங்களையும் ஆராய்கிறார்.

சாதாரணமாக இக்கலைகளைப் பயில்வதற்கு ஆறு வருஷங்கள் ஆகும். இவ்வாறாகக் குருமடத்தில் இருப்பவர்களைப்போல் பாடங்களைப் படித்து, துறவி அந்தஸ்திற்கு முஸ்திப்பு செய்கிறார். இவர்கள் கடைசி வார்த்தைப்பாடு கொடுத்த பிறகுதான், அதாவது சபை உடைதரித்து நான்கு வருஷங்களானபின்புதான் சபையில் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். திருச்சபை சட்டப்பிரகாரம் ஒரு கர்த்தூசிய சபையில் உள்ளவர், உலகில் உள்ள சகல

காரியங்களையும் விட்டு விலகுகிறார். வேறு எந்தச் சபையிலும் சேர்ந்து ஆடம்பர வார்த்தைப்பாடு கொடுத்தவர், கர்த்தூஸிய சபையில் சேரும்போது அதில் இரண்டு வருஷம் நவசந்நியாசியாக இருந்து, ஆடம்பர வார்த்தைப்பாடு (*Solemn Profession*) கொடுத்தபின், சபையின் ஆயுள் அங்கத்தினராகிறார். இவர்களின் சாதாரண வார்த்தைப்பாடு அவர்களது சங்கத்தில் (*Chapter house*) கொடுக்கப்பட்டபோதிலும், ஆடம்பர வார்த்தைப்பாடு வெகு ஆடம்பரத்தோடும், திவ்விய பூசை நடக்கும் போதும் கொடுக்கப்படுகிறது.

ஏகாந்தசீவியமும், மௌனமும் ஒரு கர்த்தூஸியரின் ஆஸ்பதமான இரண்டு அஸ்திவாரங்கள் என்பதை மறக்கலாகாது. ஆகையால் உலகத்தை அறவே ஒழித்தாலொழிய, இச்சபையில் சேருவதால் பிரயோசனமில்லை. அவைகளைத் திரும்பவும் அடைய கொஞ்சமாவது ஆசைப்பட்டால், உலக இன்பத்தை வெறுத்தது அர்த்தமற்றதாகும்.

இச்சபையில் சேர்வோர் நன்றியில்லாதவராகமாட்டார். அறையில் தனிச்சீவியம் ஜீவித்தாலும், தங்களுடைய செபத்திலோ, பத்திக்குரிய முயற்சிகள், வேலைகளினால் அடையும் பலன்களிலோ, தங்கள் உறவினர்களுக்கும், பந்துமித்திரர்களுக்கும் தங்களின் பக்தியையும், கடமையையும் காட்டிக்கொள்ளலாம்.

அதிக அவசர சமயத்திலும், நீதிமுறைகளுக்கடுத்த சமாதானஞ் செய்யவேண்டிய நேரத்திலும் கடிதமூலமாகவோ, சம்பாஷணை மூலமாகவோ கலந்துகொள்வது சபையின் ஒழுங்குக்கு விரோதமல்ல.

இன்னும் ஒரு துறவியின் தாய் அல்லது சகோதரிகள் மடத்திற்குப் பார்க்க வரலாம். பெரிய மடத்தில் (*Guest house*) தங்கி, குறிக்கப்பட்ட துறவியிடம் குறிக்கப்பட்ட நேரங்களில் பேசிக்கொள்ள அனுமதியளிக்கப்படும்.

(2) துணைச் சகோதரர்கள் (*Laybrothers*)

தேவ ஏவுதலால் தூண்டப்பட்டு, தனது ஏகாந்த ஜீவியத்தையும் அரும்பெரும் தவத்தையும் செய்வதற்குக் கானகமே தகுதி எனக் கருதி, சார்ட்ரஸுக்கு (*La Chartreuse*) அர்ச். புருனோ சென்றபொழுது, ஆண்ட்ரூ, (*Andrew*) கெரின் (*Guerin*) என்ற இரண்டு பேர்கள் அவரைப் பின்சென்றார்கள். தன் ஸ்தாபகரைப் பின்பற்றியே, நாளதுவரையிலும் துணைச் சகோதரர்களுக்காக அநேக நபர்களை கர்த்தூஸிய சபை ஏற்றுக் கொண்டுவருகிறது. துறவற ஜீவியத்திலிருந்துகொண்டு பரோபகாரம் புரிதலே இவர்களின் முக்கிய கடமையாகும். ஆகையால்

சபையின் துவக்கத்திலிருந்து துணைச்சகோதரர்கள் இருந்து வருகிறார்கள் என்பது வெள்ளிடைமலை.

கர்த்தூஸிய சபை அநேக பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவைகளில் பாடும் துறவிகளின் பகுதி (*Choir Monks*) இரவில் அடிக்கடி எழுந்திருந்து சங்கீதம் பாடவேண்டும். ஆனால் துணைச் சகோதரர்களுக்கெனத் தனிப்பட்ட ஒழுங்குகள் உண்டு. இவர்கள் பாடும் துறவிகளின் பகுதியைப்போல் அடிக்கடி கண்விழிக்காவிட்டாலும், இரவில் இரண்டொரு நேரங்களில் சங்கீதம் பாட எழுந்திருக்கவேண்டும். மேலும் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும், கடன் திருநாட்களிலும், சிற்சில முக்கிய திருநாட்களிலும் பாடமுடியாவிட்டாலும், எல்லாச் சங்கீதங்களுக்கும் ஆஜராகவேண்டும். ஒவ்வொருநாள் காலையிலும் இவர்களுக்கென ஒரு விசேஷப் பூசை செய்யப்படுகிறது. இவர்கள் அழைத்தலின் நல்லுணர்ச்சியைக் கைவிடாது, இவ்வுலகில் ஜீவிப்பதற்கு உதவியாகவும், அந்தஸ்துக்குத் தக்கவாறும், சில முக்கிய தினங்களில் ஞானப்பிரசங்கங்களும், புத்திமதிகளும் இவர்களுக்குச் சொல்லப்படுகிறது.

பரித்தியாகிகள் (*Donates*)

பரிசோதனை அந்தஸ்தில் (*Postulancy*) ஒரு வருஷமும், நவசந்நியாசியாக ஒரு வருஷமும் (*Novitiate*) இருந்தபிற்பாடு, சபையில் சேர ஆசிப்பவர்கள் (*Aspirants*) பரித்தியாகிகளாக (**Donates**) சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். இவர்கள் வார்த்தைப்பாடு கொடுப்பதில்லையானாலும், கர்த்தூஸிய சபையைச் சேர்ந்தவர்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இங்கிலையில் இருந்துகொண்டே தங்கள் வாழ்நாட்களை முழுதும் கழிக்கலாம்.

பரித்தியாகிகளாக (**Donates**) ஐந்து வருஷங்கள் இருந்தபிற்பாடு, சிரேஷ்டர்களுக்குத் திருப்திகொடுப்பார்களானால், மறுபடியும் அவர்கள் நவசந்நியாசி அந்தஸ்திற்கு (*Novitiate*) துணைச் சகோதரர்களாக (*Laybrothers*) எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள். ஒரு வருஷம் நவசந்நியாசி ஜீவியம் முடிந்தபிற்பாடு மூன்று வருஷங்களுக்கு சாதாரண வார்த்தைப்பாடு (*Simple Vows*) கொடுக்கிறார்கள். மூன்றாவது வருஷ முடிவில் தாங்கள் சபையில் ஆயுள் பரியந்தம் நிலைத்திருக்க முடியுமென்று ஆடம்பர வார்த்தைப்பாடு (*Solemn Vows*) கொடுக்கிறார்கள். இவ்விதமாக நவசந்நியாச காலமான பதினொரு வருஷங்களும் சென்ற

பிற்பாடுதான், ஒருவர் கர்த்தூஸிய சபைக்குத் துணைச் சகோதரரென இணைபிரியாதவிதமாய்க் கட்டுப்பட்டிருக்கிறார்.

பரித்தியாகிகளும் (*Donates*), துணைச் சகோதரர்களும் (*Laybrothers*) சேர்ந்து ஓர் குடும்பமென அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் சங். பொக்கிஷதாரி (*Procurator*) சுவாமியவர்களின் பார்வையில் இருக்கிறார்கள். சங். பொக்கிஷதாரி சுவாமியவர்கள்தான் இவர்களுக்குக் கீழ்ப்படிதல் என்னும் வார்த்தைப்பாட்டின்பேரில் கட்டளைகள் கொடுக்கலாம். சங். சுவாமியவர்களுக்குத்தான் இவர்கள் கீழ்ப்படியக் கடமைப்பட்டுள்ளார்கள். ஒவ்வொருவருக்கும் அலுவல்கள் கொடுப்பதும், தேவையான காரியங்களை எல்லாம் செய்துவைப்பதும் சங். பொக்கிஷதாரி சுவாமியவர்களே. சுருங்கச் சொல்லின் ஞானக் காரியங்களிலும், இலௌகீக காரியங்களிலும், ஒவ்வொருவருக்கும் வேண்டியவற்றைச் செய்து, இக்குடும்பத்தை நடத்திவருவது சங். பொக்கிஷதாரி சுவாமியவர்களின் கடமை.

(3) கர்த்தூஸிய கன்னியர்கள் (*Carthusian Nuns*)

கர்த்தூஸிய கன்னியர்களின் காலம் 1147-ம் வருஷத்திலிருந்து ஆரம்பமாகிறது; அதாவது அர்ச். புருனோவின் மரணத்திற்கு ஏறக்குறைய ஐம்பது வருஷங்களுக்குப்பிறகே உண்டானது. இத்தருணத்தில் **பிரபேயோன்** (*Prébayon*) என்ற இடத்தில் இருந்த சில கன்னியர்கள் கர்த்தூஸிய சபையில் சேர்ந்துகொள்ளத் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்துக்கொண்டார்கள். அப்போது அச்சபைக்குத் தலைமையாயிருந்த அர்ச். ஆன்தெல்ம் (*St Anthelm*) கடவுளுடைய கிருபையினாலும், அருளினாலும் ஏவப்பட்டு அவர்களுடைய விருப்பத்திற்கு இணங்கினார். சம்மனசுக்களுக்கொத்த புண்ணிய நற்குணங்களினாலும் சிறப்புற்று விளங்கி, புண்ணிய சாங்கோபாங்கத்தைப் பின்பற்றுமாறு விட்டுச்சென்ற வில்னெவின் அர்ச். ரொசாலின்தான், (*St Rosaline of Villeneuve*) அர்ச். புருனோவின் கன்னியர் சபைக்குப் பாதுகாவலாகவும், முன் மாதிரிகையாகவும் கொண்டாடப்படுகிறார்.

பின்வரும் வித்தியாசங்கள் விசேஷமாய்க் கவனிக்கத்தக்கனவாகும். இக்கன்னியர்களின் வாசஸ்தலம் தனித்த அறைகளல்ல. ஆனால் மடத்தின் அகன்ற முற்றத்திலுள்ள திறந்த சிறு அறைகளேயாம். சாதாரணமாகக் கன்னியர்கள்

தம்தம் அறைகளில் தனிமையாகத்தானிருப்பார்கள். ஆனால் சில பிரத்தியேகமான வேலைக்குப் பல பேர் உதவிவேண்டியிருக்குமாதலால், இவர்கள் ஒருவரோடு ஒருவர் சந்திப்பதுமுண்டு. அவர்கள் சாப்பிடுவதும் சேர்ந்துதான். வாரத்திலுள்ள சுத்தபோசன நாட்களில் கண்டிப்பாய்த் தனிமையாய் இருக்கவேண்டியது. இது தவிர தினந்தோறும் ஓய்வு நேரங்களில் சந்திப்பார்கள். அசௌக்கிய காலங்களில் அவர்கள் ஒரு சிறிய வியாதியஸ்த அறையில் வைத்துப்பராமரிக்கப்படுவார்கள்.

"கன்னிமை விரதமளித்தல்" என்னும் பழமையானதும், முக்கியமானதுமான உரிமையைக் கர்த்தூஸிய கன்னியர்கள் தங்களுக்கு உரியதாகக்கொண்டிருக்கிறார்கள். இக்கன்னிகாவிரதத்தை ஏற்றுக்கொள்ள அந்தவிடத்து மேற்றிராணியாருக்குத் தான் உரிமையுண்டு.

தன்னையே பரித்தியாகஞ் செய்யும் அந்த நாளில் ஒவ்வொரு கன்னியாஸ்திரியும் தனது கழுத்துப்பட்டியுடையும் (*Stole*), வலது கரத்தில் கைவஸ்திரமும் (*Maniple*) அணிந்துகொள்ளுவாள். மேலும் சேசுக்கிறீஸ்துவினோடு தன் பத்தினி ஐக்கியத்தைக் காட்டும்பொருட்டு, ஒரு மோதிரம் பெற்றுக்கொள்ளுவார்கள். அவர்கள் இம்மோதிரத்தை தம் மரணபரியந்தம் அணிந்து கொள்ளவேண்டியது. இறந்த பிறகோ சபைக்குரிய உடையோடு அலங்கரிக்கப்பட்டு அவளது பிரேதம் க்ஷேமிக்கப்படும்.

குருக்கள் ஒருவரும் இல்லாவிட்டால், அங்கிருக்கும் கன்னிகைகளில் ஒருவர் காலை ஜெபத்திற்குரிய சுவிசேஷத்தைப் படிக்கலாம். ஆனால் இச்சமயத்தில் அவள் கழுத்துப்பட்டி (*Stole*) யணிந்திருந்த உடைபோட்டிருக்கவேண்டும். மடத்தில் தினந்தோறும் நடக்கும் திவ்ய பலிபூசையில் விரதத்துவ வார்த்தைப்பாடு கொடுத்த ஒரு கன்னிகை நிருபம் வாசிக்கலாம். ஆனால் கைவஸ்திரம் (*Maniple*) அணிந்திருக்கவேண்டுமென்னும் கட்டாயமில்லை.

ஒவ்வொரு கர்த்தூஸியக் கன்னிகை மடமும் ஒரு மடாதிபதினியால் ஆளப்படும். இச்சபையைச்சேர்ந்த ஒரு குருவானவர் ஞானக்காரியங்களைக் கவனித்துக்கொண்டு வருவார். இவருக்கு விக்கர் என்றும், பெரிய சபைக் குருவென்றும் பெயருண்டு. இவருக்கு மற்றொரு குரு உதவியாளர் என்ற பெயருடன் துணைபுரிவார். இவர்கள் ஒன்று அல்லது பல கர்த்தூஸிய சபைச் சகோதரர்களோடு தங்கள் சபையொழுங்கின்பிரகாரம் ஜீவிப்பார்கள்.

இவர்கள் ஒவ்வொரு ஞானச் சடங்குகளுக்கும் வருவார்கள். ஆனால் இவர்கள் கன்னியர்களிடமிருந்து இரட்டை இரும்புக் கிராதியாலும், இரட்டைக் கறுப்புத் திரையாலும் வேறுபடுத்திப் பிரித்து வைக்கப்படுவர்.

ஒவ்வொரு கன்னிகையின் உடுப்பானது கிட்டத்தட்ட அச் சபைக் குருக்களின் வஸ்திரங்களைப் போன்றதாகும். அதாவது வெள்ளைக் கம்பளத்தினாலாகிய அங்கியும், அதே கம்பள நூலால் நெய்யப்பட்ட சிரசுமூடி என்ற வஸ்திரமுமாம். ஆனால் கன்னியர்களுடைய உடுப்புக்கும், குருக்களின் உடுப்புக்கும் சிற்சிறிய வித்தியாசங்களுண்டு. குருக்கள் தலையை மூடி இருக்கிறார்கள். அதற்குப் பதிலாய் கன்னியர்கள் கழுத்தையும் தலையையும் மூடும் ஓர் பெரிய முக்காடு அணிகிறார்கள். இம்முக்காடு நவ கன்னியர்களுக்கு வெள்ளை நிறத்திலிருக்கும், வார்த்தைப்பாடு கொடுத்த கன்னியர்களுக்கு அது கறுப்பு நிறத்திலிருக்கும். திவ்விய நன்மை வாங்கும்போதும், இன்னும் பல முக்கிய சந்தர்ப்பங்களிலும் அவர்கள் அகலமான ஒரு வெள்ளை அங்கியை அணிந்துகொள்ளுவார்கள்.

இச்சபைக்குத் தெரிந்தெடுக்கப்பட்டவர்களைச் சாதாரணமாக ஒரு வருஷ பரிசோதனையில் வைக்கிறார்கள். பின்பு உடுப்புக் கொடுக்கப்படும். பின்னும் நவகன்னிகை காலத்திற்கு ஒரு வருஷத்திற்குப் பிற்பாடு, கன்னியர்கள் கொண்ட ஒரு கூட்டங் கூடி நவகன்னிகைகளுக்குச் சார்பாகப் பரிந்து பேசினால், தங்களுடைய கடைசி வார்த்தைப்பாட்டைக் கொடுப்பார்கள். கன்னிகை சம்ரோக்ஷணம் பெறுவதற்கு நான்கு வருஷ உள் ஜீவியமும், இருபத்தைந்து வயதிற்குக் குறைவில்லாமலும் இருக்க வேண்டும்.

இக்கன்னியர்கள், துணைச்சகோதரிகளையும், பரித்தியாகினிகளையும் ஏற்றுக்கொள்கின்றனர். 'துணைச்சகோதரிகளின் அந்தஸ்தும் பரித்தியாகினிகளின் அந்தஸ்தும்' துணைச்சகோதரர்கள், பரித்தியாகர்களுடைய அந்தஸ்துக்களைப்போல்தான். மேலும் அவர்களுடைய நவசந்நியாச காலமும் ஒன்றுதான்.

குறிப்பு :—யாதாமொருவள் கர்த்தூஸிய சபையில் சேரத் தெரிவித்தமாத்திரத்தில், சபையினுடைய ஒவ்வொரு ஒழுங்குத்திட்டமும் தாமதமின்றி அவளுக்கு அனுப்பப்படும்.

IV

சபையின் ஆட்சி வகை

கர்த்தூஸிய சபையைச்சேர்ந்தவர்கள் எல்லோரும் துறவிகள் சபையைச் சேர்ந்தவர்களே. இச்சபையின் தலை மடம் பெரிய சாட்ரஸ் மடமே (*Grande Chartreuse*). உலக முழுவதிலும் உள்ள கர்த்தூஸிய சபையைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் தலைவரான சங்கைக்குரிய அதிசிரேஷ்டர் சுவாமியார் (*Reverend Father General*) இம்மடத்தில்தானிருக்கிறுர். இவரே அம் மடத்திற்கு மடாதிபதியுமாவர். இப்பொழுது இச்சபையானது எப்படி ஆட்சி செய்யப்பட்டு வருகிறதெனக் கவனிப்போம்.

I. இச்சபையை சரியான முறையில் ஆட்சி செய்யும்பொருட்டு சட்ட திட்டங்கள் (*Statutes*) ஏற்பட்டிருக்கின்றன.

II. சபைக்குச் சட்டங்களை அமைக்கவோ அல்லது அதை ஆட்சி செய்யவோ சபையினுள்ள பொதுக்கூட்டம் (*General Chapter*) ஒன்றே உரிமை பெற்றுள்ளது. அப்பொதுக்கூட்டம் கூடாத ஏனைய காலங்களில், அதன் பிரதிநிதியாயிருக்கும் கனம் அதிசிரேஷ்டர் சுவாமியாருக்கு மேற்சொன்ன உரிமைகளுண்டு.

III. அநேக இடங்களிலுள்ள இச்சபையின் மடங்கள் மடாதிபதிகளால் (*Prior*) ஆளப்பட்டு வருகின்றன. அவருக்கு உதவியாக விக்கர் (*Vicar*) என்பவரும், இன்னும் பொக்கிஷதாரி, சக்கிறீஸ்தன், துணைவர் (*Coadjutor*) நவசந்நியாசத் தலைவர் எனப் பலரிருக்கின்றனர்.

IV. இச்சபையில் சேர்ந்திருப்பவர் யாவரும், பாடும் துறவிகள் (*Choir Monks*) துணைச் சகோதரர்கள் (*Laybrothers*) கன்னியர் (*Nuns*) என முப்பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். இம்மூன்று பிரிவுகளிலும், ஆடம்பர வார்த்தைப்பாடு கொடுத்தவர்கள் (*Solemn Professed*), நவசந்நியாசிகள் (*Novices*), அபேக்ஷகர்கள் (*Postulants*) என முப்பிரிவுகளுண்டு.

நாம் முன்னமே குறிப்பிட்ட பொதுக்கூட்டமானது வழக்கமாய், பாஸ்குத்திருநாளுக்கும் கர்த்தர் பரலோகத்திற்கு எழுந்தருளிய திருநாளுக்கும் இடையில், லுக்காவிற்கும் பக்கத்திலுள்ள பர்னேடா (*Farneta*) என்னுமிடத்திலுள்ள தலை மடத்தில் கூடுகிறது. அச்சபைக்கு அக்கிராசனம் வகிக்க உரிமை பெற்றவர் கனம் சிரேஷ்டர் சுவாமியவர்களே. தங்கள் தங்களுக்கென்று குறிக்கப்பட்ட மாகாணங்களைச் சுற்றிப் பிரயாணம் செய்து பார்வையிடுவோரும் (*Provincial Visitors*), மடாதிபதிகளும், கன்னியர் மடங்களின் பெரிய சுவாமியார்களுமே இச்சபையில் அங்கத்தினராயிருக்கமுடியும். இச்சபை கூடும் ஒவ்

வொரு தடவையும் சகல உத்தியோகஸ்தர்களும் தங்கள் தங்கள் வேலையை இராஜினமா செய்துவிடுகின்றனர். இராஜினமா செய்தவர்களில் சிலரை மறுபடியும் அவ்வேலைக்கே நியமிப்பதற்கும், அல்லது புதிதாகச் சிலரை ஏற்படுத்துவதற்கும் இச்சபைக்குப் பூரண உரிமையுண்டு. அது கூடுங் காலத்திலே கவனிக்கப்படவேண்டிய விஷயங்களைக் கவனித்துத் தக்க ஏற்பாடுகளையும் செய்கிறது. சபையிலேயோ அல்லது சபையைச் சேர்ந்த அங்கத்தினர்களிடத்தோ பிணக்குகள் ஏற்பட்டிருக்குமாகில் அவைகளைத் திருத்தி, குற்றமுள்ளவர்களைத் தண்டிக்கவும் இப் பெரியோர் சபைக்கு அதிகாரமுண்டு. சபையின் சட்ட திட்டங்களையும், ஒழுங்குகளையும் சரியாய் அனுசரிக்கவேண்டிய சில விதிகளை இச்சபை ஏற்படுத்தலாம். அப்படி ஏற்படுத்தப்பட்ட விதிகள் அடுத்த வருடம் சபை கூடும்வரை அனுபோகத்திலிருக்கும். அவைகள் பலன்தரக்கூடிய விதிகளாயிருக்குமாகில் அடுத்த வருடம் கூடும் பெரியோர் சபையில் அது ஸ்திரமாக்கப்படும். அப்படி எந்த ஒழுங்கு ஸ்திரமாக்கப்படாமலிருக்கிறதோ அவற்றை அதற்குமேல் அனுஷ்டிப்பதில்லை. இவ்விதமாய் இப்பொதுக்கூட்டம் ஏற்படுத்தும் சட்ட திட்டங்களையோ, ஏனைய சீர்திருத்தங்களையோ யாவரும் கடைபிடித்தொழுகவேண்டியது கடமை. இச்சபையானது கூடியிருக்குங் காலத்திலே கனம் சிரேஷ்டர் உள்பட, எட்டுப்பேர் அடங்கிய **சட்டசபை** (*Definitory*) எனும் சங்கத்தினிடத்திலேதான் சகல அதிகாரங்களும் உள்ளது. இச்சங்கத்தின் அங்கத்தினர்கள் இரண்டு வருடத்திற்குச் சேர்ந்தார்ப்போல தேர்ந்தெடுக்கப்படமுடியாது. இச்சங்கமானது தன் இஷ்டம்போல் எதுவும் செய்யலாம். இது அநேகர் கூடிய சங்கமானபடியால் சபையில் எவ்வித குறையும் ஏற்படக் காரணமில்லாமலிருக்கிறது. குற்றங்குறைகளைச் சீர்திருத்துவதிலும், குற்றம் செய்வோரைத் தண்டிப்பதிலும் இச்சங்கமானது சிறிதும் தயங்குவதில்லை. இப்பேர்ப்பட்ட ஒரு நல்ல ஒழுங்கினாலும், இப்பொதுக்கூட்டம் வருஷமொருமுறை கூடுவதாலும்தான் கர்த்தூஸிய சபை அதன் புண்ணிய சாங்கோபாங்கத்தில் அதிகவிருத்தியடைந்து வருகிறது. முன்னமே குறிப்பிட்டிருப்பதுபோல சுற்றுப்பிரயாணம்செய்து பார்வையிடுவோர் (*Provincial Visitors*) மடாதிபதிகளுக்குள்ளேயே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்கள் ஒவ்வொரு மடத்தையும் பார்வையிடுதல் அவசியம். மடங்களில் ஒழுங்கும் கிரமமும் சரியாய் அனுசரிக்கப்படுவதற்கு இதுவும் ஒரு காரணம்.



இங்கிலாந்தில் எட்டாவது ஹென்ரியின் ஆளுகையின்கீழ், 1535-ம் ௵ மே-மீ 4-௳, முத்திப்பேறுபெற்ற ஜான், ராபர்ட், அகுஸ்தீன் என்ற கர்த்தூஸிய மடாதிபதிகள் வேதசாக்ஷிகளாக கொல்லப்பட்டார்கள்.



அர்ச். புருனோ

டச்சு சித்திரக்காரரான பீட்டர் பால் ரூபன்ஸ் என்பவரால் இப்படம் சித்தரிக்கப்பட்டது.

"உலகம் உருண்டாலும் சிலுவை நிலையாய் நிற்கின்றது."

கர்த்தூஸிய சபை கன்னியாஸ்திரிகளுக்குப் பாதுகாவலான

அர்ச். ரோசலின் வில்லெனெவ்.

சங்கைக்குரிய சுவாமி (*Reverend Father*) என்று அழைக்கப்படுவது சபையின் சிரேஷ்டர் ஒருவருக்கே செல்லும். மற்ற எவருக்கும் வணக்கத்துக்குரிய (*Venerable Father*) என்ற அழைப்புதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. சபையின் தலைவரே பெரிய சார்ட்ரஸின் மடாதிபதியுமாவர் என்பது இவ்வத்தியாயத்தின் முதலிலேயே அறியக்கிடக்கின்றது. அவர் அந்த மடத்தை விட்டு வெளியேறவேமுடியாது. வெளியேறவும் கூடாது. பொதுக்கூட்டம் கூடாத காலங்களில் அதன் பிரதிநிதியாக இவர் இருப்பதால், இவருக்குச் சகல அதிகாரங்களுமுண்டு. மற்ற மடாதிபதிகளுக்கு இருப்பதுபோலவே, இவருக்கும் உதவி செய்ய ஒரு காரியதரிசியுண்டு.

ஒவ்வொரு மடத்திற்கும் தலைவர் (*Prior*) மடாதிபதியாவார். இவர் பெரியோர் சபையாலோ அல்லது அம்மடத்திலுள்ள சபையிலுட்பட்டவர்களாலோ தேர்ந்தெடுக்கப்படுவார். அம்மடங்களில் கூடும் கூட்டங்களில் இவரே அக்கிராசனம் வகிக்கவேண்டியவர். குற்றம் செய்தவர்களை எச்சரிக்கை செய்யவோ, அல்லது தண்டிக்கவோ இவருக்குப் பாத்தியதையுண்டு. சபையின் சட்ட திட்டங்களை விளக்கிக் காண்பிக்க இவர் ஒருவருக்கே உரிமையுண்டு. தேவையானபோது மடத்து அங்கத்தினரெவரையும் சட்ட அனுமானத்திலிருந்து விலக்க, இவருக்குச் சுதந்தரமுண்டு. இவ்வளவு பெரிய அதிகாரங்கள் அவர் கையில் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும், இவர் மற்றவர்களுக்கு ஒரு எஜமானனாக வல்ல, ஒரு ஊழியனாகவே இருக்கிறார் என்பதை இவர் உணர்ந்திருக்கிறார். இவருக்கு உதவியாக இருப்பவர் டோம் விக்கர் (*Dom Vicar*) என்பவரே. மடாதிபதி இல்லாத சமயங்களில் மடத்தின் பக்திக்கடுத்த விஷயங்களைக் கவனிக்கவேண்டியவர் இவர். ஆத்ம சம்பந்தமில்லாத மற்றக் காரியங்களை பொக்கிஷதாரி (*Dom Procurator*) பார்த்து வருகிறார். துணைச் சகோதரர்கள் செய்யவேண்டிய வேலையை இவரே கவனிக்கவேண்டியது. வேலை செய்பவர்களும் யாது செய்வதென இவரிடமிருந்தே தெரிந்துகொள்ளவேண்டியது. கோவில், பரிசுத்த பாத்திரங்கள், பூசை ஆயத்தங்கள் முதலியவற்றை சக்கிறிஸ்தன் (*Dom Sacristan*) கண்காணித்து வருகிறார். பூசை, ஜெபம், முதலியவற்றிற்கு மணியடிப்பவரும் இவரே. பூசைக்கடுத்த சகல விஷயங்களையும் இவரே கவனிப்பார். மடத்திற்கு வருபவர்களைக் கவனிப்பது துணைவர் கடமை (*Dom Coadjutor*). மடத்திற்கு வருவோர்க்கு இவரே பாவசங்கீர்த்தனம் கேட்கிறார்.

நவசந்நியாசிகளின் தலைவர் (*Novice Master*) நவசந்நியாசிகளையும், சபையில் உட்படப்போகிறவர்களையும், வார்த்தைப்பாடு கொடுத்த புது துறவிகளையும் கவனிப்பவராவர்.

V

கர்த்தூஸிய சபையின் சரித்திரத்தைச் சிறிது ஆராய்தல்

கர்த்தூஸிய சபையில் சேர விருப்பமுள்ள நேயர்களுக்கு இச்சபையின் ஒழுங்குகளை ஓர் சிறிது தெரிவித்தபின், மேன்மை பொருந்திய இந்நவசந்நியாச சபையில் அவர்கள் அடையும் பலா பலன் யாது என்று அறிய, அச்சபையின் சரித்திரத்தை ஒரு சிறிது தெரிவிக்கலாமென்று கருதுகின்றேன். இச்சபையைச் சற்று உற்று நோக்குங்கால் "இச்சபை ஒருபோதும் சீர்திருத்தம் செய்யப்படுவதில்லை; ஏனெனில் இது ஒருபோதும் சீர்கெடுவதில்லை" என்பதை ஓர் சிறிது ஆராய்ந்தால்தான் மேற் சொன்ன உறுதி வெள்ளிடைமலைபோல் தெளிவடையும். அப்படி இச்சபையின் சரித்திரத்தைப் படிப்பதற்குமுன், இச் சபையை ஸ்தாபித்தவரின் சரித்திரத்தை ஓர் சிறிது ஆராய்தல் மிகவும் நன்மையான காரியம் என்று புலப்படுகின்றது. ஏனெனில் இச்சபையை ஸ்தாபித்தவரின் சரித்திரத்தைப் படிப்பதினால் இச்சபையின் முதற் துவக்கம் என்னவெனப் புலப்படும்.

அர்ச். புருனோ (*St Bruno*)

கீர்த்திபெற்ற இக்கர்த்தூஸிய சபையை ஏற்படுத்தியவர் பெயர்பெற்ற அர்ச். புருனோ என்பவர். இவர் அக்காலத்தில் ஜீவித்த ஜனங்களில் கல்வியில் நிபுணர்கள் என்றும், வேதப் பிரசங்கிகளில் கீர்த்திபெற்றவர்கள் என்றும் சொல்லப்படுகின்றவர்களில் ஒருவராய் இருந்தார் என்பது, பிரான்சு, ஜெர்மனி, இத்தாலி, இங்கிலாந்து முதலிய தேசங்களின், நாலாபக்கங்களினின் றும் தேடிக் கிடைக்கப்பட்ட நூற்றுஎழுபத்தெட்டு அதிகாரங்களையுடைய "பெட்ரோல்" என்னும் புஸ்தகத்தினின்றும் தெரியவருகிறது. பெட்ரோல் (*Bead-Roll*) என்னும் நூல், அர்ச். புருனோ என்பவர் காலஞ்சென்ற சில வருடங்களுக்குப்பின்

எழுதப்பட்டது. அதிலுள்ள அதிகாரங்களெல்லாம் அர்ச். புருனோ என்பவரை மிகவும் மேன்மைப்படுத்தியே தெரிவிக்கின்றன. "மெய்யான உபந்நியாசம் செய்பவரில் ஓர் சிறந்த உதாரணமானவர்" என்றும், "இவர் அக்காலத்திலுள்ள ஜனங்களில் மேன்மைக்கும் மகிமைக்கும் ஓர் உறைவிடம்" என்றும், "கடவுளால் உண்டாக்கப்பட்ட திருச்சபையின் மேன்மையும், மாணிக்கமுமானவர்," என்றும் அந்த நூற்கள் அர்ச். புருனோ என்பவரைப் புகழ்ந்து கூறுகின்றன.

1039-ம் வருடம் **கோலோன்** நகரில் அர்ச். புருனோ என்பவர் அவதரித்தார். இவர் சிறுபத்திலேயே படிப்பதில் பாண்டித்தியமுள்ளவராய் இருந்தபடியினாலே, அதிமேற்றிராணியார் ஹானோ என்பவர், இவரை தன் சொந்த ஊரிலுள்ள வேதப் பிரசங்கிகள் இருந்து படிக்கும் இல்லிடமான அர்ச். குயினிபெர்ட் கல்லூரியில் சேர்த்தார். அப்படி இருந்தாலும், அர்ச். புருனோ வேதானுசாரம் படிப்பதில் அதிகம் கவனம் உடையவரேயல்லாமல், அநித்திய உலகத்தின் மகிமையைச் சிறிதளவேனும் கருதவில்லை. தெய்வத்தைக் கண்டடையும் தத்துவ ஞான தேவ சாஸ்திரத்தைக் கற்றுக்கொள்ளவேண்டுமென்று மிகுந்த அவாவுடையவரானார். ஆகையினால், அக்காலத்திலுள்ள மாக்ஷிமை பொருந்திய வேதப்பிரசங்கிகள்செய்யும் உபந்நியாசங்களைக் கேட்பதற்காக அந்நகரைவிட்டு '**ரேம்ஸ்**' *(Rheims)* என்ற நகருக்குப் பிரயாணமானார். அங்கு அர்ச். புருனோ சின்னாட்களில் வேதப் பிரசங்கிகளின் சிஷ்யர்களில் முதன்மைஸ்தானம் பெற்றுவிட்டார். 'பாரிஸ்', 'டூர்ஸ்' என்ற நகரங்களிலுள்ள மாணிடர் இவரைச் சிறந்த ஞானி என்று அழைத்தனர்.

அர்ச். புருனோ என்பவர் கற்கவேண்டியவற்றைச் சிறிதுங் குறைவில்லாமல் கற்றபின், குருத்துவ சீவியத்தைக் கைக்கொண்டு, வேதபோதக அப்போஸ்தொலிக் அலுவலில் தம் வாழ்நாளைச் செலவழித்தார். "**ரேம்ஸ்**" நகரில் இவருடைய மகிமையும், மேன்மையும் மென்மேலும் செழித்தோங்கினதைக் கண்டு அந்நகரின் அதிமேற்றிராணியாராகிய ஜெர்வே துஷாத்தோ-துலுவார் *(Gervais de Chateaudu Loir)* என்பவர் அர்ச். புருனோ என்பவரை சர்வ கலாசாலைக்கு அதிபதியாகவும், குருமாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்கும் தத்துவ சாஸ்திரியாகவும் ஏற்படுத்தினார். இன்னும் இவருடைய கண்காணிப்பில் அதிமேற்றிராசனத்திலுள்ள சில வெளிப் பாடசாலைகளையும் வைத்திருந்தார். இப்படியாக

மேற்கூறிய தொழில்களிலிருந்து சாரமுள்ளதும், நீதியுடையதும், மேன்மை பொருந்தியதுமான தன் உபந்நியாசத்திஞல், இருபது ஆண்டுகளுக்குள் தன் சிஷ்யர்களின் நன்மதிப்பைப் பெற்றுவிட்டார். "உபாத்திமார்களில் இவர் மேன்மை பொருந்திய வாழ்க்கையை நடாத்தும் ஓர் தூண்டுகோலாக விளங்கினுர்." "இவரது பாடசாலையில் படித்த உலகத்தின் நாலா பக்கங்களிலிருந்து வந்த மாணவர்கள் யாவரும் வேதப்பிரசங்கிகளாஞர்கள்." வரையறுத்துக் கூறமுடியாததும், மொத்த ஜனத்தொகை இத்தனை என்று தெளிவாய்க் கூறமுடியாததுமான படிப்பில் பிரசித்தி பெற்ற மாணவர்கள் யாவரும் இவருடைய உபந்நியாசத்திஞல்தான் பிரசங்கிகள் ஆஞர்கள் என்றும், இவருடைய மகிமையை மற்ருெரு நூல் தெரிவிக்கின்றது. இவ்விதமாக அர்ச். புருஞே என்பவருக்கு நற்பெயரும் மகிமையும் உலகத்தின் எத்திசையிலுமிருந்து கிடைத்ததானது இவருடைய வாழ்நாட்கள் முழுவதிலும் உண்டான அநேக கஷ்டமான போராட்டங்களில் இவருக்கு ஓர் ஆறுதலைக் கொடுத்தது. பெயர்பெற்ற சர்வகலாசாலை அதிகாரியான அதிமேற்றிராணியாராகிய **ஜெர்வேஸ்** மறு உலகம் சென்றபின், **ரேம்ஸ்** நகரின் தேவாலயத்திலுள்ள யாவற்றையும் திருட்டுத்தனமாகக் கைப்பற்றின மேற்றிராணியாராகிய மஞஸ்செஸ் என்பவரோடும் அவரது சிஷ்யர்களாகிய எதிராளிகளோடும், அர்ச். புருஞே என்பவர் அநேக வருஷங்களாகச் சண்டை செய்யவேண்டியதாயிருந்தது. ஹில்டெபிராண்ட் (*Hildebrand*) என்னும் அர்ச். **7-ம் கிரகோரியாரின்** ஆசையை மிகுந்த பக்தி சிரவணத்துடன் கையேற்றுக்கொண்டு, **உத்தியோகத்தில் அமர்த்தலின்** காரணமாக அக்காலத்தில் அவர் போர்புரிந்த ஓர் பயங்கரமான யுத்தத்தில் உண்மைக்கு ஜெயம் உண்டாவதற்காகவும், நியாயவாதம் செழித்தோங்குவதற்காகவும், அர்ச். புருஞே, தன் இடங்கள், பொருள்கள், சமாதானம் ஆகிய இவைகளைத் தத்தம்செய்து, அவ்வுண்மையை நிலைநாட்டுவதற்குத் தன்னுடைய புகழ், சந்நியாசத்துவமாகிய யாவற்றையுமே இழக்கத் துணிந்து நின்ருர்.

அர்ச். கிரகோரியார், அர்ச். புருஞே என்பவருக்குத் திரும்பவும் ஆஸ்தியும், அதிகாரமும் கொடுக்கும்படி தீர்மானித்தார். ஆஞல் தனிவாசம் செய்து, கடவுளோடு ஐக்கியமாகவேண்டுமென்னும் அவாவானது அர்ச். புருஞே என்பவரை மேற்கொண்டது. ஆகவே அவர் வேதாகமத்தில் நமது ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் தெரிவித்த சத்தியத்தின்படி, தனது ஆஸ்தி

களையெல்லாம் விற்று, ஏழைகளுக்குத் தானம் செய்துவிட்டு நிலை பெற்ற மோக்ஷ பேரின்பத்தை அடைவதற்கான வழிபாடுகளைக் கடைப்பிடித்துச் சென்றார். பின்பு அர்ச். ரோபர்ட் (St Robert) என்பவரிருந்த மொலெஸ்ம் என்னுமிடத்திற்குச் சென்றார். அங்கு அந்த அர்ச்சியசிஷ்டவரின் அதிகாரத்தின்கீழ் தன்னை சந்நியாசி வாழ்க்கைக்குத் தயார்ப்படுத்தினார். ஆனால் அவருடைய அவாவானது ஜனங்கள் மத்தியில் வாழ்வதைவிட்டு, தனிவாசம் செய்யத் தூண்டிக்கொண்டிருந்தது. ஆகவே கடவுளின் ஏவுதலால் உண்டான தனது கருத்தை நிறைவேற்ற முதலில், மனித சஞ்சாரமில்லாத செஷ்-பாண்டென் (Séche-Fontaine) என்னும் வனத்திற்குப்போனார். ஆனால் அங்கேயும் அநேகம்பேர் அவரைப் பின்தொடர்ந்து சென்றமையால், அவர் அங்கிருந்து கடவுளுக்குமட்டும் ஊழியம்செய்ய ஏதுவாயிருக்கும் வேறொரு வனத்திற்குப்போகத் தீர்மானித்தார். இவ்விதமாகக் கடவுள், அவருக்கு வரவிருக்கும் தபசு ஜீவியத்திற்குத் தகுதியான துணைவர்களைத் தெரிந்தெடுக்கவும், அவரது அந்தரங்க நடபடிக்கைகள் பூரண பரிசுத்தமடையவும், போதுமான காரணத்தைக் கொடுத்தார்.

1084-ம் வருஷம் அவர் வேண்டிய சாதனங்களோடும் லான்வின், பூர்கிலுள்ள ஸ்றீபன், டையிலுள்ள ஸ்றீபன், ஹக் முதலிய குருமாணவருடனும், ஆன்ட்ரூ, கெரின் என்னும் இரண்டு வேலையாட்களுடனும், லாச் சார்ட்ரஸ் (La Chartreuse) என்னுமிடத்திற்கு கிரெனோபுள் (Grenoble) என்னும் ஊர் வழியாகப் போனார். கிரேநோபுள் மேற்றிராணியாராகிய அர்ச். ஹூக் என்பவர் அவரை நோக்கி, "உமது வாழ்க்கைக்கு கடவுளால் நிதானிக்கப்பட்டிருக்கும் இடமானது, துஷ்ட மிருகங்களால் பீடிக்கப்பட்ட ஒரு பெரும் வனம். அதாவது ஒரு ஜெயிலைப்போன்றது. ஆகவே தகுந்த சாதனங்கள் இல்லாமல் அங்கு வாழ்வதானது மிகவும் கடினம்" என்று சொன்னார். அந்த இடத்தில் புருனோ என்பவர் தன்னுடன் கூட்டிச்சென்றவர்களின் உதவியால் மரக்கட்டைகளைக்கொண்டு, அர்ச். தேவமாதா பெயரால் ஒரு சிறிய கோவில் கட்டி, அதில் தனது பரிசுத்த வாழ்க்கையை ஆரம்பித்தார். நாம் இவரது வனாந்தர கடின வாழ்க்கையை ஆராயுமிடத்து, தற்கால சுகவாழ்விலிருப்பவர்க்கு ஒருவிதத் திகில் ஏற்படும்.

அர்ச். புருனோ என்பவர் தனது ஆறு வருஷ வனவாசத்தில் கார்த்தூஸியர்களுடைய தொகை அதிகரிப்பதையும், அவருக்கு நேரிட இருக்கும் வாழ்க்கையின் வழிபாடுகளையும் அறிந்தார்.

ஆனால் திடீரென ஒருவித கடூரமான எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்ததானது அவர் கஷ்டப்பட்டு கட்டிய சிறிய கோவிலுக்கு இடையூருக இருந்தது. 1090-ம் ஆண்டு வசந்த காலத்தில், ஓர் சமயம் அவருடைய சீஷராயிருந்த இரண்டாம் **உர்பன்** (*Urban II*) என்னும் பாப்பானவர் அவரை **ரோமுக்கு** வந்து, திருச்சபைக்கடுத்த காரியங்களில் அவருக்குதவி புரியு மாறு கட்டளை இட்டார். பாப்பானவர் கட்டளை இட்டமையால் அவருக்கு மறுக்கமுடியாமல் போயிற்று. ஆதலால் அவர் வசித்துவந்த அந்த துறவி ஆஷ்ரமத்தை, முன்னர் அபிரகாம் என்பவர் எவ்வாறு மனந்துணிந்து தனது ஏக புதல்வன் ஈசாக்கை சர்வேசுரனுக்கு பலியிடத் துணிந்தாரோ, அதைப்போலவே அந்த ஆஷ்ரமத்தை சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்தார். அவரு டைய துணைவர்களில் அநேகர் அவரைப் பின்தொடர்ந்து ரோமுக்குப் போனார்கள். சிலர் பலவாருகப் பிரிந்து, அவர்கள் வாழ்ந்துவந்த ஆஷ்ரமத்தை பாழ்நிலையில் விட்டுச் சென்றனர்.

இரண்டாவது **உர்பன்** என்னும் பாப்பானவர் அர்ச். புருனோ வுக்கு தம்முடைய வத்திக்கான் அரண்மனையில் அநேக இட வசதிகள் செய்துகொடுத்து, அவரைத் தம்முடைய பிரமாணிக்க முள்ள யோசனையாளராக நடத்திவந்தார். அதிலிருந்து அர்ச். பாப்பானவர், அர்ச். புருனோவின் யோசனைப்பிரகாரம் எல்லாக் காரியங்களையும் நடத்திவந்தார் என்று விளங்குகின்றது. அக் காலத்தில் இத்தாலி தேசம் அநேக பிரிவினைச் சபைகளால் மூழ்கப்பட்டிருந்தது. ஐரோப்பிய நாடுகளின் நிலைமையானது மிகவும் பரிதாபத்துக்குரியதாய் இருந்தது. இந்த பிரிவினைச் சபைகள் **ராவேன்னு**விலுள்ள விபர்ட் என்னும் பொய்ப்பாப்பு வின் **ஆதிக்கத்தில்** இருந்தன. இந்தப் பிரிவினைச் சபைகள் இதற்குமுன், ஏழாவது கிரகோரி என்பவரால் எதிர்த்துத் தாக் கப்பட்டுவந்தமையால், பிரிவினைக்காரர் தங்கள் விரோதத்தைத் தீர்த்துக்கொள்ள தக்க சமயம் பார்த்திருந்தார்கள்.

ஜெர்மெனி தேசத்தில், அந்நாட்டுச் சக்கரவர்த்தி, பகிரங்க மாய், பாப்பானவரின் விரோதிகளோடுசேர்ந்து இத்தாலியாவின் மீது படையெடுக்க, ஒரு சேனை சேகரிக்க ஆரம்பித்தான். கீழ்த் தேசத்தில், வரவர அதிகரித்துக்கொண்டுவந்த துலுக்கர்களின் பலமானது, அங்குள்ள கிறீஸ்துவர்களைப் பயமுறுத்தியது. ஐரோப்பாவில் ராஜாக்களுக்குள் ஒற்றுமையில்லாது வருந்தினர். சாதாரணமாய்ப் பெரிய குழப்பங்கள் இருக்கும் சமயத்தில் நடப்பதுபோல, அச்சமயமும் கிறீஸ்துவர்கள் தங்கள் ஒழுக்கத்

தில் சிறிது தளர்ச்சியடைந்தது வருத்தத்துக்குரிய காரியமே. ஆனால் இரண்டாம் **உர்பான்** என்னும் பாப்பானவர், அர்ச். புருனோவின் உயர்ந்த ஞானத்தினாலும், ஆழ்ந்த யோசனையாலும் இந்த ஆபத்தான சம்பவங்களை எதிர்த்து ஜெயம்பெற்றார். அர்ச். பாப்பானவர் ஜெர்மெனியிலுள்ள இராஜாக்கள் எல்லோரையும் ஒன்றுசேர்க்கும்படி ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்தினார். நான்காவது ஹென்ரியோடு சண்டைசெய்து அவனை அடக்கும்படி, இத்தலி தேசத்தில் சிசிலி நாட்டுக்கு அதிபதியான திருச்சபைக்கு வச்சிரத்தூண்போலிருந்த **ரோபர்ட்** பிரபுவையும், **ரோஜர் கிஸ்கார்ட்** என்பவரையும் தூண்டினார். அச்சமயம் கூடின திருச்சபையின் அநேக ஆலோசனை சங்கங்களினால், திருச்சபையின் உந்நத ஒழுக்கம் மறுபடியும் கொண்டுவரப்பட்டது. பிறர் சிநேகத்தினாலும், வீரத்தினாலும் தூண்டப்பட்டு, அர்ச். பாப்பானவர் துலுக்கர்களுக்கு விரோதமாகச் சிலுவையுத்தத்தை பிரசங்கிக்கும்படி பிரான்ஸ் தேசத்துக்குச் சென்றார்.

1091-ம் ஹூ, அர்ச். புருனோவின் அதி உந்நத உழைப்பிற்குக் கைம்மாருக, அர்ச். பாப்பானவர் அவரை ரேஜியோ நகரின் அதிமேற்றிராணியாராக்க விரும்பினார். அச்சமயம் அர்ச். புருனோ தனிவாசம்செய்யத் தமக்கு இருக்கும் ஆவலை அர்ச். பாப்பானவருக்குத் தெரியப்படுத்தி, அப்பெரும் பதவியை அவர் ஏற்றுக்கொள்ளும்படி அநேகதடவை அர்ச். பாப்பானவர் அவருக்கு அறிவித்தபோதிலும், அர்ச். புருனோ அதை மறுத்துவிட்டார். அப்படியானால் அர்ச். புருனோ தனிவாசத்துக்குத் தெரிந்தெடுக்கும் இடம், இத்தாலி தேசத்துக்குள்ளே தான் இருக்கவேண்டுமென்ற நிபந்தனையுடன், கடைசியாக அர்ச். பாப்பானவர் இத்தாலியாவிலேயே அர்ச். புருனோ தனிவாசத்தை ஆரம்பிக்கலாம் என்று அனுமதிகொடுத்தார்.

அர்ச். புருனோவின் சபை ஸ்தாபகத்தின் செலவையும், அதில் சந்நியாசிகளைச் சேர்ப்பதற்கு உண்டாகும் செலவையும் ரோஜர் என்னும் பிரபு ஏற்றுக்கொண்டார். அவர் தமக்குச் சொந்தமான ஒரு பெரிய இடத்தையும் அர்ச். புருனோவுக்கும், அவர் சீஷர்களுக்கும் கொடுத்தார். இந்த இடம் **கலாபிரியா**வில், லாத்தொர் என்ற பெயருடன் அழைக்கப்படுகிறது. முன் புருனோ ரோமைக்குச் சென்றபோது, அவரது சிஷ்யர்கள் லாண்ட்வின் என்பவருடைய தலைமையின்கீழ் பிரவேசித்த மடத்தைப்போன்ற மாதிரியாகவே, இப்போது இங்கேயும் புருனோவும், அவர் சீஷர்களும் மடம் கட்டினார்கள்.

அர்ச். புருனோவின் ஏகாந்தசீவியம் இன்னும் சிறிது தடங்கல் படலாயிற்று. பெனெவென்தும் (*Beneventum*), பியாசென்சா (*Piacenza*), மெல்பே (*Melfe*), ட்ரோஜா (*Troja*) முதலிய நகரங்களில் நடந்த திருச்சபை சங்கங்களுக்கு அர்ச். புருனோ, பாப்பானவரோடுகூட செல்லவேண்டியதாயிருந்தது. இரண்டாவது உர்பன் என்னும் இப் பாப்பானவர், ரோமையை விட்டு கிளர்மென்ட் நகரில் நடந்த திருச்சபைச் சங்கத்துக்கு தாமே நேரில் அக்கிராசனம்வகிக்க சென்றிருந்தபொழுது, அர்ச். புருனோ, ஒழுக்கமும், சமாதானமும் இத்தாலி தேசத்தில் நிலைக்கும்படி, ரோஜர் பிரபுவிடம் சென்று கலந்து யோசித்துச் சில காரியங்கள் நடத்தவேண்டியிருந்தது. அர்ச். பாப்பானவர் திருச்சபை சங்கத்துக்குப் போய்த் திரும்பின பிற்பாடுதான், தம்முடைய பிரமாணிக்கமுள்ள புருனோவை அவருடைய பரிசுத்த தனி ஜீவியத்தை யாதொரு தடங்கலின்றி லாத்தோர் என்ற மடத்தில் நடத்தும்படி பூர்ண சுதந்தரத்துடன் அனுமதி கொடுத்தார்.

இந்தப் பிரயாணங்களுக்குப் பிற்பாடு அர்ச். புருனோ சர்வேசுரனோடு ஒன்றித்துத் தம்முடைய தனிவாசத்தை கலாப்பிரியாவில் யாதொரு தடங்கலின்றி நடத்திவந்தார். அர்ச். புருனோ தம்மைப் பின்பற்றித் தம்மோடு இருந்த சீஷர்களுக்குத் தம்மை முழுதும் கையளித்து, மிகவும் திறமையாய் ஞானக்கல்வி ஊட்டினதோடு, பெரிய சார்ட்ரஸ் (*Grande Chartreuse*) மடத்தில் அப்பொழுது கஷ்டநிலைமையிலிருந்த தம் சகோதரர்களையும் ஒரு தகப்பனைப்போல் கவனித்துவந்தார். அவர் இறப்பதற்கு முன்னால் அவர்களைக் கடைசித்தடவையாக பார்க்கவேண்டுமென்று மிக ஆவலுற்றார். ஆனால் அவர் அப்பொழுது நெடுந்தூரப் பிரயாணம் செய்யமுடியாதவராய் இருந்ததினால் அது கூடாமற்போயிற்று. ஆனதால் லான்ட்வின் என்பவர் (*Landwin*) நெடுந்தூரப் பிரயாணம்செய்து தென்இத்தாலியாவிலுள்ள தாம் வசித்துவந்த இல்லத்துக்கே வந்தது, அர்ச். புருனோவுக்கு மிகவும் சந்தோஷத்தைக் கொடுத்தது. இந்த இரண்டு அர்ச்சியசிஷ்டவர்களும், தங்களுக்குத் தெரியாமலே சர்வேசுரனின் அதி உந்நத சபை ஒன்று சிறிது சிறிதாய் விருத்தியடைந்துகொண்டு வந்த இவ்வரிய காரியத்தைப்பற்றிக் கலந்து யோசித்தார்கள். கடந்த வருடங்களில் அவர்கள் இருவரும் தங்களுடைய அநுபவத்தில் கண்டவைகளையெல்லாம் ஒன்றுசேர்த்தார்கள். சர்வேசுரனோடு ஒன்றித்துத் தனி ஜீவியம் ஜீவிக்கும் இச்சகோதரர்களின் மனதில் பக்தி வைராக்கியத்தையும், மன உறுதியையும் மூட்டும்படியான சில

ஒழுங்குகளை வரைந்தனர். லான்ட்வின் பரிசுத்த குருவின் எச்சரிக்கைகளையும், ஆலோசனைகளையும் மிகுந்த விருப்பத்தோடு சேகரித்தார். மடத்திலுள்ள தம் சகோதரர்கள் விண்ணப்பித்துக்கொண்ட கேள்விகளையும், அவர்களுடைய சந்தேகங்களையும், ஆசைகளையும், நாட்டத்தையும் அர்ச். புருனோவுக்கு அறிவித்தார். அவர் அர்ச். புருனோவால் கொடுக்கப்பட்ட தீர்மானத்தைக் கவனமாய்க்கேட்டு எழுதிக்கொண்டார்.

சில வருஷங்களுக்குப் பிற்பாடு கர்த்தூஸிய சபையிலுள்ள பழக்கவழக்கங்களை டோம் கீந்கோவுக்கு (*Dom Guigo*) அவர் எழுதும்போது, அடிப்படையாக இவ்விவரமான குறிப்புகள் வெளிப்பட்டன. கர்த்தூஸிய சபையிலுள்ளவர்களுக்கு அவர்களுடைய சபையின் ஒழுங்குகள்தான் அவர்களுடைய வேதவாக்கியம். கீந்கோதான் அவர்களுடைய சுவிசேஷகர். அர்ச். புருனோ (*St Bruno*) அவர்களுடைய சபையை ஸ்தாபித்தவரும், அவர்களுக்குச் சட்டம் கொடுப்பவருமாவர். பெரியச் சார்ட்ரஸ் (*Grande Chartreuse*) மடத்திலுள்ள தம்முடைய ஞான மக்களைப் பார்ப்பதற்கு அர்ச். புருனோ எவ்வளவு ஆவலுடன் இருந்தாரென்று, அவர் அவர்களுக்கு எழுதிய கடிதத்திலிருந்து தெரிய வருகிறது. அவர் சொல்லுவதாவது "சகோதரர்களே! நான் உங்களுக்குச் சொல்லுகிறதென்னவெனில், கடவுளுக்குப் பிற்பாடு என்னுடைய ஒரே ஒரு ஆசை என்னவென்றால், உங்களை வந்து பார்ப்பதுதான். உங்களிடம் வர என்னால் கூடும்பொழுது கடவுளுடைய அநுக்கிரகத்தினால் வரத் தயாராயிருக்கிறேன். உங்களுக்குப் பயணோபசாரம் கூறுகிறேன்."

ஆனால் அர்ச். புருனோவிற்குத் தன் அந்தியகாலம் நெருங்கிவிட்டது. சர்வேசுரனுடைய பிரமாணிக்கமுள்ள ஊழியனுக்குச் சம்பாவனையின்காலம் அடுத்து வரவர, அவர் தன்னுடைய வேலையில் அதிக ஊக்கத்தையும் உற்சாகத்தையும் காட்டினார். அவரிடத்திலுள்ள தேவ சிநேகமானது அதிகமதிகமாக சுடர்விட்டு எரிந்தது. தபசையோ, முன்னிலும் இப்பொழுது இரட்டிப்பாய்க் கையாடினார். தொடர்ச்சியாய் ஜெபத்தியானத்திலே மூழ்கிவிட்டார். பரலோக பேரின்பம் அவருடைய வதனத்தில் திகழ்ந்து விளையாடிக்கொண்டிருந்தது. இதோ யேசுவின் பிரமாணிக்கமுள்ள ஊழியன் இவ்வுலகத்தில் தான் செய்யவேண்டியதையெல்லாம் செய்து முடித்துவிட்டார். இப்பொழுது நித்திய அதிபர் அவருக்குச் சம்பாவனை அளிக்கச் சித்தங்கொண்

டார். ஆகையால் கி. பி. 1101-ம் வருடம், அக்டோபர் மாதம் 6-ம் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று, தன் மக்கள் அனைவரும் சுற்றிலும் முழங்காலிலிருந்து ஜெபிக்க, புருனோ கடைசித் தேவத்திரவிய அனுமானங்களைப் பெற்றார். அவருடைய ஆத்துமமும் இம்மண்ணுலகை நீத்து விண்ணுலகேகினது.

இப்பொழுது உலகத்தின் கண்ணுக்கு மறைந்து கிடந்து, தமக்குப் பிரமாணிக்கமாய்த் தாராள குணத்தோடு, தன்னுடைய உயிரையே தத்தஞ்செய்த ஊழியனின் பெருமையைச் சகலருக்கும் வெளிப்படுத்தச் சித்தங்கொண்டார் நமது நல்ல இயேசு பரன். ஆகையால் இப்பரிசுத்தவானின் கல்லறையில் அரும் பெரும் புதுமைகள் அநேகம் நடந்தன. அதைக் கண்ணுற்ற அனைவரும் பிரமித்தனர். அவரை வாழ்த்திப்போற்றினர், போற்றிப் புகழ்ந்தனர். அவருக்குச் சங்கையும் செய்தனர். ஆனால் கர்த்தூஸிய சபை துறவிகளோ தங்களுடைய சபையின் நோக்கத்திற்கு இசைவாய், அவருடைய அர்ச். பட்டத்திற்காக ஒரு சிறிதும் முயற்சி எடுக்கவில்லை. அதற்காகப் பிரயாசைப்படவுமில்லை. ஆனால் அவர் இறந்த தினம், அவர்களுடைய மடத்தில், ஓர் குடும்ப ஞாபகார்த்தமாகமட்டும் பாவிக்கப்பட்டு வந்தது. பல புதுமைகளால் தன்னுடைய ஊழியனை மகிமைப்படுத்தின சர்வ தயாபரக் கடவுள் அவருக்கு அர்ச்சியசிஷ்டபட்டத்தையும் அளித்தருளச் சித்தமானார். 1514-ம் வருஷம், **10-ம் சிங்கராயர்** என்னும் பரிசுத்த தந்தையவர்கள், புருனோ என்னும் மகாத்துமாவிற்கு அர்ச்சியசிஷ்டபட்டத்தைக் கொடுத்தார். இதுவும் போதாதென்றாற்போல், **15-ம் கிரகோரி** என்னும் அர்ச். பாப்பானவர் அர்ச். புருனோவின் திருநாளை திருச்சபை முழுவதிலுமே ஆடம்பரமாய்க் கொண்டாடவேண்டும் என்ற கடமையைச் சுமத்தினார். அர்ச். புருனோவினுடைய ஆத்துமம் இம்மண்ணுலகைவிட்டு விண்ணுலகேகிவிட்டபோதிலும், அவர் தன்னுடைய பரிசுத்த ஜீவிய சரித்திரத்தின்வழியாக சகலருக்கும் நன்மாதிரிகையாய் இருந்து மங்காப்புகழுடன் இன்னும் இவ்வுலகில் ஜீவித்து வருகிறார் என்பதற்கு ஒரு சிறிதும் ஐயம் இல்லை. அவருடைய பரிசுத்த ஜீவியம் மக்களுக்கோர் அழியாப் பொக்கிஷம் என்று சொன்னால் மிகையாகாது.

இவ்வுண்மையை உணர்ந்தே **பரிசுத்த தந்தை 11-ம் பத்திநாதர்** கீழ்வருமாறு கூறினார்: "திருச்சபையின் அபிவிருத்தியின் மட்டில் எப்பொழுதும் கண்ணுங்கருத்துமாயிருந்து, அதின் அவசர வேளைகளில் எப்பொழுதும் கைகொடுத்துதவிவரும் சர்வ

தயாபரக்கடவுள், தம்முடைய அளவில்லாதசிநேகத்தினால், ஜெப தப ஏகாந்தஜீவியத்திற்கு மறுபடியும் புத்துயிர் அளித்து, முன்னிருந்தபடி அதைச் சரியான நிலைமைக்குக் கொண்டுவருவதற்காக, அர்ச்சியசிஷ்டதனத்தின் கொடுமுடியை அடைந்த ஒரு மகா ரிஷியைத் தெரிந்துகொண்டார். அவர்தான் கர்த்தூஸியன் சபையை ஸ்தாபித்த அர்ச். புருனோ என்னும் புண்ணியவாளர். "தம் வாழ்க்கையனுபவத்தையே, யாம் பெற்ற பேறு பெறுக" என, நேர்த்தியான ஒழுங்குத்திட்டங்களை அமைத்து கர்த்தூஸிய சபையை ஸ்தாபித்தார். சட்டதிட்டங்கள் யாவும் சகலரும் போற்றிப் புகழத்தக்கவை. அங்கத்தினரை, ஜெபதப ஏகாந்த ஜீவியத்தில் நிலைநிறுத்தி, கடவுளோடு ஐக்கியப்படுத்தக்கூடிய ஒழுங்குகள், அங்கத்தினர் தங்களுடைய போராட்டத்தில் சோர்ந்து போகாதபடி கடைசிவரையிலும் ஏகாந்த ஜீவியத்தில் நிலைநிறுத்தக்கூடிய ஒழுங்குகள் முதலிய இவ்வளவு நேர்த்தியான ஒழுங்குத் திட்டங்களால் அமைக்கப்பட்டிருப்பதே, கர்த்தூஸிய சபை. இச்சபையானது உண்டாகி இதுவரை 900 வருடங்களாயினும் இன்னும் அது புதிதாக ஏற்பட்டதுபோல், ஒரு மாற்றத்திற்கும், அல்லது சீர்திருத்தத்திற்கும் இலக்காகாமல் இருந்து வருகின்றது. உலகத்தில் உண்டான எத்தனையோ வேதாந்த சபைகளில் இது ஒன்றுதான் இதுவரை இவ்வாறு மாற்றப்படாமலிருந்து வருகின்றது!"

அர்ச். புருனோவின் மரணத்திலிருந்து 19-ம் நூற்றண்டு வரை

அர்ச்சியசிஷ்டவரின் மரணத்திற்குப்பின், சபையின் அபிவிருத்தி "கத்தோலிக் என்சைக்லோபீடியா" (*Catholic Encyclopaedia*) என்ற புஸ்தகத்திலிருந்து கீழ்க்கண்டவாறு தெரியவருகிறது. கர்த்தூஸிய சபையானது தன்னுடைய சொந்தத் தன்மையின் காரணத்தினாலேயே, மெதுவாகத்தான் வளர்ந்துவந்தது என்று தெரிகிறது. 1300-வது வருஷத்தில் 39 மடங்கள் இருந்தன. ஆனால் 14-ம் நூற்றுண்டின் முடிவிலோ வேறு 113 புது மடங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. அவை ஸெலீசியா, பொகிமியா, ஹங்கேரி முதலிய இடங்களில் பரவியிருந்தன. 15-ம் நூற்றுண்டில் 44 புது மடங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. ஆகவே 1521-ம் வருடத்தில் அங்கத்தினர்களின் மொத்ததொகை 206. ஆனால் 16-ம் நூற்றுண்டிலோ அழிக்கப்பட்ட மடங்கள் 39. ஸ்தாபிக்கப்பட்ட மடங்களோ 13 தான். 1559-ம் வருடத்தில்

மெக்ஸிக்கோ தேசத்தில் ஒரு புது மடம் ஸ்தாபிக்கப்படுவதற்காக எவ்வளவோ முயற்சியெடுத்தும், ஸ்பானிய தேசத்து அரசனின் ஆக்ஷேபனையால் ஒன்றும் பயன்படாதுபோயிற்று. 1607-ம் வருஷத்தில் லு மசோன் (*Le Masson*) என்பவர் எழுதுகிறதாவது: "இப்பொழுது இங்கு மொத்தம் 2500 குருக்களும் (*Choir Monks*) 1300 துணைச்சகோதரர்களும், பரித்தியாகிகளும் (*Donates*) இருக்கிறார்கள். இவர்கள் ஒவ்வொரு துறவி ஆஷ்ரமத்திலும் சராசரி 12 சுவாமிமார்களும், 8 அல்லது 9 துணைச் சகோதரர்களுமாக இருந்து வருகின்றனர்." பிறகு 22 மடங்கள் அதே நூற்றாண்டில் தோன்றின. 1784-ல் ஸ்பானிய அரசாங்கம் தன்னுதீனத்தில் இருக்கும் மடங்கள் எல்லாம் கர்த்தூஸிய சபையிலிருந்தே பிரிந்துகொள்ளுமாறு வற்புறுத்தினது. பிராஞ்சு இராச்சிய குழப்பக்காலத்தில், 122 கர்த்தூசியன் மடங்களில் ஏறக்குறைய எல்லாமுமே நாசமாக்கப்பட்டன. இவ்விதமே ஸ்பானியா தேசம், பிரான்சு தேசம், இத்தாலி தேசம் முதலிய நாடுகளில் இருந்த அநேக மடங்கள் 1835-ம் வருஷம் அழிக்கப்பட்டன. வேத கலகத்துக்குத் தப்பின ஸ்விட்சர்லாந்திலுள்ள பொர் திய என்னும் கர்த்தூஸிய மடமும் 1847-ம் வருஷம் அழிக்கப்பட்டது; கொடிய குழப்பத்தின் காலத்தில் இத்தலி தேச கர்த்தூஸிய மடங்கள் இரண்டாம் முறையாக அடியோடு அழிந்தன. பிரான்சிலுள்ள கர்த்தூஸிய மடங்கள் பிரெஞ்சு சட்டங்களால் நிலைகுலைந்து சிதைந்துபோயின. பின் 19-ம் நூற்றாண்டுவரை ஒரு மடமும் ஸ்தாபிக்கப்படவில்லை. 2-ம் ஜோசப் என்பவன் 24 மடங்களை நாசமாக்கினான். ஆம், கடவுளுடைய ஆசீர்வாதம் ஒரு சபையில் இருக்கிறதென்பதற்கு, அச்சபைக்கு நிகழும் கஷ்டதுன்பங்களே சிறந்த அடையாளம்.

தற்காலத்திலுள்ள கர்த்தூஸிய மடங்கள்

இத்தலி தேசத்தில் லுக்கா, ரோம், ப்ளாரென்ஸ், பீசா, லத்தோர், வெதானு, த்ரிசுல்தி, நேப்ளஸ், லாசர்வரா என்னுமிடங்களிலும்; ஸ்பெயினில் மீராப்ளோரெஸ், ஆவ்லாதெயி, மோந்தெ அலெக்ரே, தரகோனு என்னுமிடங்களிலும்; ஸ்விட்சர்லாந்தில் லாவல் சாந்த் என்னுமிடத்திலும்; ஜெர்மனியில் ஹெய்னிலும்; யுகோஸ்லாவியாவில் ப்ளெதெர்ஜ் என்னுமிடத்திலும்; இங்கிலாந்தில் பார்க்மின்ஸ்டரிலும் தற்போது கர்த்தூஸிய மடங்கள் நிலவுகின்றன.

கர்த்தூஸிய கன்னியாஸ்திரி மடங்கள் இத்தாலி தேசத்தில் மோத்தாக் குரோஸா, சான்பிரான்ஸெஸ்கோ என்னுமிடத்திலும்; பிரான்சில் போரெகாரிலும்; பெல்ஜியத்தில் புர்டின்னிலும் இருக்கின்றன.

ஆங்கில மாகாணம்

நாம் ஆங்கில மாகாணத்தோடு அதிக சம்பந்தம் வைத்துக் கொள்ளவேண்டியிருப்பதால், அத்தேசத்திலுள்ள கர்த்தூஸிய சபைச் சரித்திரத்தைப் படிப்பது நமக்கு மிகுந்த பிரயோஜன மாயிருக்கும். ஆங்கில மாகாணத்தில் முதல் கர்த்தூஸியமடம் 1178-ம் ௵, இரண்டாவது ஹென்றி அரசரால் சாமர்செற்றில் வித்தாம் என்னும் இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. அத்தோடு 1280-ம் ௵ தேற்த கன்னட்டில் "கின்னல்கிம்" என்னு மிடத்தில் மற்றொரு மடம் முளைத்து வந்தாலும், அது 1321-ம் வருஷம் கைவிடப்பட்டது. கடைசி வீடாகிய பத்தாவது மடம் ஷீன் என்னுமிடத்தில் ஐந்தாவது ஹென்றி அரசரால் 1414-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. பின்னால் 1429-ம் வருஷம் ஸ்காட்லந்து தேசத்து முதலாம் ஜேம்ஸ் அரசரால் பேர்த் என்னு மிடத்தில் ஒரு கர்த்தூஸிய மடம் ஸ்தாபிக்கப்பட்டது. எட்டாவது ஹென்றி அரசரால் இங்கிலாந்திலுள்ள அநேக கத்தோலிக்கர்கள் அர்ச். பாப்பானவரின் அதிகாரத்தினின்று பிரிவுபடுகையில், அங்குள்ள சகல கர்த்தூஸிய துறவிகளும், விசேஷமாய் 1370-ம் வருஷம் லண்டனில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த கர்த்தூஸிய சபை துறவிகளும், மேற்படி பிரிவுக்கு விரோதமாக இருந்தார்கள். மேலும் 1535-ம் ௵ மே மாதம் 4-ந் தேதியன்று, பிரிஜிடைன் சந்நியாசியாரான ரிச்சர்ட் ரேயினோல்ட்ஸ் என்பவரும், லண்டனி லுள்ள ஜோன் ஹோட்டன் போவேலிலுள்ள ரோபர்ட் லோரேன்ஸ், அக்ஸோல்மிலுள்ள அகுஸ்தஸ் வெப்ஸ்டர் ஆகிய மூன்று கர்த்தூஸிய சபை சிரேஷ்டர்களும், வேதத்துக்காகத் தங்கள் பிராணனைக் கொடுத்தார்கள்.

பிறகு ஐந்து வருடமளவாய் லண்டனிலுள்ள கர்த்தூஸிய சபை துறவிகளில் சிலர் சிரச்சேதம் செய்யப்பட்டும், வேறு சிலர் நியூகேட் ஜெயிலில் பட்டினியாய்ப் போடப்பட்டும் கொல் லப்பட்டார்கள். சிறிது காலத்தில் மேரி ராணியார் சிம்மாசனம் ஏற, அவர்களது ஆட்சிகாலத்தில் பல மடங்களைச்சேர்ந்த பத் தொன்பது கர்த்தூஸிய துறவிகள் மாரிஸ் ஜான்ஸி என்னும் சிரேஷ்டருக்கடியில் ஷீன் என்னும் இடத்தில் ஒன்றுகூடினார்கள். ஆனால் அது வெகுகாலம் நீடித்திருக்கவில்லை. ஏனெனில் மேரி ராணியார் சிறிது காலத்தில் இறந்துபோக, துறவிகள் மறுபடி யும் மறைந்து ஜீவிக்க நேர்ந்தது. ஸான்ஸி சிரேஷ்டர் 1581-ம் வருஷம் காலஞ்சென்றார். ஆனால் 1783-ம் ௵ இரண்டாவது

ஜோஸப் என்பவன், 6 பாடும் துறவிகளையும், 2 பரித்தியாகிகளையும் கொண்டிருந்த **நியூ போர்ட்டிலுள்ள ஷீன் ஆந்தளோரம்** என்னும் கர்த்தூஸிய மடத்தை அழித்தான். அப்படி அழிக்கும்வரை மேற்கூறிய துறவிகள், தேசத்தின் பல பாகங்களிலும், பல ஊர்களிலும், பலவித கஷ்டங்களுக்குள்ளாகி கூட்டமாய் வசித்துவந்தார்கள். அக்கூட்டத்தின் கடைசி சிரேஷ்டரான **சங். வில்லியம் சுவாமியார்** 1797-ம் ௵ ஜூன்-௴, 2-ந் தேதி **சிறிய மால்வர்ன்** என்னுமிடத்தில் காலஞ் சென்றார். அவரது கைப்பிரதிகளும், ஷீன் ஆங்குளோரும் என்னுமிடத்தின் முத்திரையும், அவர் காலத்திலுள்ள பல ஞாபகச் சின்னங்களும் தற்பொழுது **பார்க்மின்ஸ்டர்** என்னும் இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கர்த்தூஸிய மடத்து துறவிகளால் பத்திரமாகக் காப்பாற்றப்பட்டு வருகின்றன.

அர்ச். ஹியூக் (*St Hugh's*) கர்த்தூஸிய மடம்

பதித மதம் செழித்தோங்கி வளர்ந்திருக்கும் ஆங்கில நாட்டில், தற்பொழுது **பார்க்மின்ஸ்டர்** என்னும் இடத்தில் அர்ச். **ஹியூக்** மடம் ஸ்தாபிக்கப்பட்டு நிலைத்திருப்பதைக் காணும் நாம், கடவுளுக்கு நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். அவ்விடத்தில் பாடும் துறவிகளுக்கான (*Choir Monks*) முப்பத்தாறு சிறு அறைகளும், 3166 அடி நீளமுள்ளதான ஒரு பெரிய மடமும் இருக்கின்றன. தற்பொழுது இம்மடத்திற்கு வணக்கத்துக்குரியவரான **சங். ஹியூக் டி வெல்ட்** சுவாமி (*Fr Hugh D. Weld*) அவர்கள் சிரேஷ்டராக இருக்கின்றனர். இப்பெரியார்க்கு இந்திய மக்களாகிய நாம் வெகுவாய் நன்றிபாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். ஏனெனில் 1938-ம் வருஷம் அக்டோபர் மாதம் 21-ம் தேதி அவர் நமக்கு எழுதிய கடிதம் ஒன்றில், தற்பொழுது அங்கு ஐம்பதுபேர் இருப்பதாகவும், அவர்களில் பாதிப்பேர் துணைச் சகோதரராய் இருப்பதாகவும், அங்கிருப்பவர்கள் இங்கிலீஷ், ஸ்காட்லாந்து, பிரெஞ்சு, அயர்லாந்து, பெல்ஜியம், டச்சு, ஜெர்மனி, சுவீஸ், அமெரிக்கா, கானடா, இந்தியா முதலிய தேசத்தார்கள் எனவும் எழுதியுள்ளார்.

VI

இந்திய கர்த்தூஸியர்

தற்சமயம் இங்கிலாந்திலிருக்கும் இந்திய கர்த்தூஸிய துறவி யாரென்று அறிய நமக்கு இயல்பாகவே எண்ணம் உண்டாகிறது. **அவர் திருவாங்கூர் சமஸ்தானத்தைச்** சேர்ந்தவரான **டோம் பிரான்ஸிஸ் க்ஷேவியர் கோமெஸ்** என்பவராகும். 1936-ம் வருஷம் அக்டோபர் மாதம், 14-ம் தேதி, அம்மடத்து சிரேஷ்டர் எழுதிய கடிதத்தில் அவரைப்பற்றி எழுதுவதாவது: "கீழ் நாட்டிலிருந்து இதுவரை கர்த்தூஸியசபைத் துறவியானவர்களில் பிரான்ஸிஸ் க்ஷேவியரே முதல்வராகும். அவர் சபையின் ஒழுங்குகளை சரிவர அனுசரித்து, மற்றவர்களுக்கு முன்மாதிரிகையாயிருக்கிறாரென்று நான் உறுதியாய்க் கூறுகிறேன். அவருக்கு ஆறு வயது நடக்கையில் தம் நாட்டிலிருந்து சிங்கப்பூருக்குப் போனார். அங்கு கல்விபயின்று நாளடைவில் ஒரு உபாத்தியாயர் ஆனார். இப்பொழுது அவருக்கு வயது இருபத்தேழு. 1937-ம் வருஷம், மார்ச்சு மாதம், 4-ம் தேதி அம்மடத்து சிரேஷ்டர் நமக்கு எழுதியுள்ள கடிதத்தில், இந்திய மக்கள் பலர் **டோம் பிரான்ஸிஸ் க்ஷேவியரைப்** பின்பற்றி, அவர் சேர்ந்திருக்கும் சபையில் சேர முன்வரக் காலம் வந்திருப்பதைத் தாம் உண்மையாய் நம்புவதாகவும், அவ்வாறு பலர் வந்து சேரத் தாம் வெகுவாய் ஆசிப்பதாகவும் சொல்லுகிறார். மேலும் டோம் க்ஷேவியர் தத்துவ சாஸ்திரத்தில் இரண்டாவது வருடப் படிப்பில் இருப்பதாகவும், தமது அழைத்தலில் மிக ஊக்கமும் பற்றுதலும் காண்பிப்பதாகவும் எழுதுகிறார். இதன் பின் அடுத்த வருடம் அக்டோபர் மாதம் 23-ம் தேதி எழுதிய கடிதத்தில், அம்மாதம் வரும் சதுர்கால சனிக்கிழமையன்று, அவர் இரண்டு சின்னப் பட்டங்கள் பெறுவாரென்றும், பின் சப்டீக்கன் பட்டம் பெறுமுன் ஆடம்பர வார்த்தைப்பாடு கொடுக்க, அடுத்த ஆகஸ்டு மாதம் வரை காத்திருக்கவேண்டுமென்றும் சொல்லுகிறார். 1939-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 16-ம் தேதி எழுதிய கடிதத்தில் அவர் சொல்லுவது யாதெனில்: **டோம் பிரான்ஸிஸ் க்ஷேவியர் கோமெஸ்,** ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி ஆடம்பர வார்த்தைப்பாடு (*Solemn Profession*) கொடுப்பாரென்றும், அதற்கு ஒன்பது மாதத்திற்குப்பிறகு குருப்பட்டம் பெறுவாரென்றும் சொல்லுகிறார்.

பின் 1939-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் 1-ம் தேதி சங். டோம் பிரான்ஸிஸ் க்ஷேவியர் கோமெஸ் எழுதிய கடிதத்தி லிருந்து, தான் தனது ஆடம்பர வார்த்தைப்பாட்டை, அர்ச். கன்னிமரியம்மாள் பரலோகத்துக்கு எழுந்தருளிய திருநாளாகிய ஆகஸ்ட் மாதம், 15-ம் தேதி கொடுத்ததாகத் தெரிகிறது.

1938-ம் வருஷம், மார்ச்சு மாதம், 24-ம் தேதி, டோம் பிரான்ஸிஸ் க்ஷேவியர் கோமெஸ் நமக்கு ஒரு கடிதம் எழுதியுள் ளார். அது பின்வருமாறு:—“இப்பொழுது நான் இங்கு வந்து நாலு வருஷம் ஆகிறது. எனக்குத்தெரிந்த ஒரு முக்கிய காரி யத்தை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அதாவது இச் சபையைப்பற்றி ஆராய்ச்சி செய்கையில், இதன் ஒழுங்குகள் மகாக் கடினமுள்ளவைகளாகத் தோன்றும். ஆனால் நாம் நினைப்பதுபோல் அவ்வளவு கஷ்டமுள்ளவைகளல்லவென்பது அறியத்தக்கது.”

படித்த பல இந்திய வாலிபர், இங்கிலாந்திலிருக்கும் அர்ச். ஹியூக் கர்த்தூஸிய மடத்துக்குச் சென்று, இந்தியாவில் ஒரு கர்த் தூஸிய மடம் ஸ்தாபிக்க எற்பாடு செய்யவேண்டுமென்று வெகு வாய் ஆசிக்கிறோம். கர்த்தூஸிய சபைகளுக்குத் தலைவரான சங். அதிசிரேஷ்ட சுவாமியார், இந்தியாவில் மடம் ஸ்தாபிக்கவேண் டிய பொறுப்பை பார்க்மின்ஸ்டரிலுள்ள கர்த்தூஸிய மடத்து சிரேஷ்டர் **ஹியூக் டி வேல்ட்** சுவாமியாரிடம் ஒப்படைத்திருக் கிறார். ஆகையால்தான் இந்திய மாணவர்கள் அர்ச். ஹியூக் கர்த்தூஸிய மடத்திற்குச் செல்லவேண்டுமென்கிறோம்.

St. Joseph's Industrial School Press, Trichinopoly—1940.



The Building Under Construction, 1938



The Completed Building, 1939

N.B.—Participate in this Apostolic work, enlighten the public with Catholic Doctrine and Principles by means of Catholic Literature, send a donation either in shape of money or books or papers or magazines to :—

MR S. LAZAR IGNATIUS B.A., B.L.,
President, Missionary Library, Dindigul, India.

OUR MISSION LITERATURE STORES

INRI

SEMETIPSUM TRADIDIT

ADVENIAT REGNUM TUUM

LITERATURE ON THE CARTHUSIANS

BY REV. FR GASPAR A. PINTO

			Postage Extra
The Carthusians in India	...	as. 8/-	1½ a.
Carthusian Life	... ...	as. 2/-	9 ps.
Carthusians	... ...	an. 1/-	6 ps.
The Carthusian Order	... ...	as. 2/-	9 ps.
Contemplative Monks for the Conversion of the Orient		as. 2/-	9 ps.
இந்தியாவிலே கர்த்தூஸியத் துறவிகள்		as. 4/-	1 a.

N.B.—Liberal reduction on large orders.

For copies apply to—

(1) **S. Singarayer Esq.,**
MISSION LITERATURE STORES,
Arokiamadha Street, Dindigul.

(2) **PIAD PINTO Esq., Cash Office, V. T., BOMBAY.**

(3) **SUPERINTENDENT,**
St Joseph's Industrial School Press,
Trichinopoly H. O., India.

N.B.—மெய்யா பொய்யா (Meyya Poyya) books (Apologetics in Tamil) are also available @ Rs 60/- a thousand, single copy as. 2. Postage extra : 9 ps.